

# ஒப்பீட்டு நோக்குகள்: நல்வாழ்வினுடைய பாலினம் ரீதியிலான பரிமாணங்கள

## இலங்கை பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வுக் கற்கையில் இருந்து கண்டறியப்பட்டவை

**சஞ்ஜீவனீ காரியவாசம்**

ஜனவரி 2014
ஆய்வுக்கட்டுரை தொடர் இல: 20 – 2014

centre for poverty analysis

# ஒப்பீட்டு நோக்குகள்: நல்வாழ்வினுடைய பாலினம் ரீதியிலான பரிமாணங்கள

இலங்கை பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வுக் கற்கையில் இருந்து கண்டறியப்பட்டவை

**சஞ்ஜீவனீ காரியவாசம்**

ஜனவரி 2014

ஆய்வுக்கட்டுரை தொடர் இல: 20 – 2014

© வறுமை ஆராய்ச்சி நிலையம் 2014

முதலாவது வெளியீடு – 2014

ISBN: 978-955-1040-73-4

தேசிய நூலகம், இலங்கை – பிரசுரிப்புக்களின் தரவு அட்டவணை

காரியவாசம், சஞ்ஜீவனீ,
ஒப்பீட்டு நோக்குகள் : நல்வாழ்வினுடைய பாலினம் ரீதியிலான பரிமாணங்கள் / சஞ்ஜீவனீ காரியவாசம். - கொழும்பு : வறுமை ஆய்வு மையம், 2014 – ப. 36 : செமீ 29

ISBN: 978-955-1040-73-4

i. 362.5095493 டிவி 23 ii. தலைப்பு

1. ஒமோன்

இவ் வெளிப்பாட்டின் பதிப்புரிமை வறுமை ஆராட்சி நிலையத்திற்கே சொந்தமானது. நூலாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் ஒப்புதலுடன் இப் புத்தகத்தின் ஏதாவது ஒரு பகுதி மீள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

CEPA இன் வெளியீட்டு தொடர் தற்போது உள்ளடக்குவன: கற்கைகள், திருத்தப்பட்ட தொகுதிகள், ஆய்வறிக்கைகள், மற்றும் விளக்கக் கட்டுரைகள் இந்த ஆய்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விளக்கங்கள் மற்றும் முடிவுகள் ஆசிரியருடைய தனிப்பட்ட கருத்துக்களாகும். மற்றும் இவை CEPA அல்லது வெளியீட்டு ஆதரவாளர்களின் கொள்கைகளை அல்லது கருத்துக்களை பிரதிபலிப்பனவல்ல.

இவ் வெளியீட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் CEPA ஊழியர்களுக்கு உரித்தானவையாகும்.

இவ் வெளியீடு தொடர்பான அனைத்து விசாரணைகளும் மேற்கொள்ள வேண்டியது.
வறுமை ஆராய்சி நிலையம்,
29, கிரகிரிஸ் வீதி, கொழும்பு 07, இலங்கை.
தொலைபேசி இல: +94 (011) 2676 955, 4690200
பக்ஸ்: +94 (011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
www.cepa.lk

அச்சுப் பதிவுஹ :
முத்ரன பிரின்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்,
69/2இ வாட் பிளேஸ்,
கொழும்பு 07.

**சஞ்சீவனீ காரியவாசம்,** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மதிப்பீடு, மற்றும் அளவீட்டு திட்டத்திற்கான புள்ளிவிபரவியலில் நிபுணத்துவம் பெற்ற ஒரு உத்தியோகத்தராவார். அவர் வர்த்தக கற்கையுடன் இணைந்து சமூக புள்ளிவிபரவியலை கற்றிருக்கின்றார். மற்றும் தற்போது மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தனது முதுநிலை கற்கையினை வர்த்தக புள்ளிவிபரவியலில் கற்றுக்கொண்டிருக்கிறார். மேலும் இவர் கற்கையின் எண்ணக்கருமயமாக்கல், தரவு சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் ஆவண மயப்படுத்தல் போன்ற உள்ளீடுகளை வளங்குவதன் மூலம் வறுமை மதிப்பீடு மற்றும் வறுமை கணிப்பீட்டில் ஈடுபட்டு வருகின்றார். அத்துடன் வறுமையின் பல்பரிமாணங்கள் மற்றும் நல்வாழ்வு தொடர்பான விரிவான ஆய்வுகளையும், ஆலோசனை தொடர்பான வேலைகளையும் செய்துள்ளார். இவருடைய விருப்பமான துறைகளாக பிரயோக புள்ளிவிபரவியல் சர்வதேச வர்த்தகம் மற்றும் நிதியியல் பால்நிலை மற்றும் ஆய்வு நுட்பங்கள் போன்றவை அமைகின்றன.

**வறுமை ஆராய்ச்சி நிலையமானது** (CEPA) அபிவிருத்திப் பிரச்சினைகள் தொடர்பான வறுமை பற்றிய சிறந்த விளங்கிக் கொள்ளலை ஊக்குவிக்கும் சுயாதீனமானதும், நிபுணத்துவமான சேவை வழங்குனராகவும் இருக்கின்றது. இங்கு நாங்கள் சுயாதீனமான பகுப்பாய்வை வழங்குதல், அபிவிருத்தியாளர்களின் மேம்பாட்டை கட்டியெழுப்புதல் மற்றும் செல்வாக்கு செலுத்தும் கொள்கைகளுக்கான வாய்ப்புகளுக்காக முயலுதல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். நாங்கள் சந்தைத் தேவைகளை எதிர் கொள்ளும் போது வலுவான ஆதாரங்களின் அடிப்படையிலான சேவைவழங்கல் ஊடாக ஒரு வலுவான நோக்கு நிலையில் நின்று பலம் கொடுக்கின்றோம். CEPA வாடிக்கையாளர்களின் கோரிக்கைகள் ஊடாக தமது சந்தை நோக்கு நிலையை பராமரிக்கின்றது. மேலும் ஐந்து பரந்த கருப்பொருள் பகுதிகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் இணைந்த சுயாதீனமான ஆய்வு நிகழ்ச்சி நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அவையாவன யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திப் பாதிப்பு, புலம்பெயர்வு, உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல்.

## ஒப்புக்கொள்ளுதல்

இவ்வறிக்கை முடிவுகள் வறுமை ஆராய்ச்சி நிறுவனத்தினால் (CEPA)[1] முன்னெடுக்கப்பட்ட பல்பரிமாணத்திலான வறுமைப் பகுப்பாய்வினுடைய அடிப்படையில் முடிவுகள் அமைகின்றன. இதற்கான நிதி உதவியினை பொருளாதார கொள்கைகளுக்கான பங்குதாரர் வழங்குகின்றனர். (PEP)[2] இவ் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்ட வினாக் கொத்து ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு முன்முயற்சியால் (OPHI)[3] உருவாக்கப்பட்ட தவறிய பரிமாணங்களின் திட்டத்திலிருந்து (Missing dimensions) எடுக்கப்பட்டிருந்தது. இந் நூலாசிரியர் CEPA விலிருந்து குடும்ப ரீதியாகவும், குழுக்கலந்துரையாடல் மற்றும் முக்கிய நபரின் நேர்காணல் மூலமாகவும் தரவை சேகரித்து வழங்கிய குழுவினருக்கும் மற்றும் இவ்வறிக்கையின் ஆரம்ப வரைவுகளின் போது தமது கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றார்.

பாலின நோக்கிலிருந்து இவ் ஆய்வறிக்கையை மீள்பார்வை செய்த CEPA இன் நிர்வாக இயக்குனர் பிரியந்தி பெர்னாண்டோ அவர்களுக்கும், ஆக்கபூர்வமானதும் கருத்தியல் சார்ந்ததுமான விமர்சனத்தை வழங்கிய சிரேஸ்ட ஆய்வாளர் நிலக்ஷி டீ சில்வா அவர்களுக்கும், இவ்வாவணத்தின் ஆரம்ப பதிப்புகளை திருத்தியும், இறுதி அறிக்கை தயாரிக்க ஊக்கப்படுத்திய பதிப்பாசிரியர் ரொஸ்னி அலெஸ் அவர்களுக்கும் சிறப்பு நன்றிகள் சென்றடைகின்றன. அவர்கள், ஏனைய தவறுகள் மற்றும் விடுபட்டவைகளுக்கு பொறுப்பானவர்கள் அல்ல.

ஆசிரியர் இதனை பதிப்பிப்பதற்கும், மற்றும் தமிழ், சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் உதவிய ஆசிய பௌண்டேசனுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றார். அத்துடன் இதனை பதிப்பிப்பதற்கும் மற்றும் இதன் மொழிபெயர்ப்புக்களை தமிழிலும், சிங்களத்திலும் பதிப்பிப்பதற்கு நிதி உதவி வழங்கிய ஆசிய பௌண்டேசனுக்கும் ஆசிரியர் தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றார்.

[1] மேலதிக தகவல்களுக்கு www.cepa.lk ஐ பார்க்கவும்

[2] மேலதிக தகவல்களுக்கு www.pep-net.org ஐ பார்க்கவும்

[3] வறுமையின் தவறிய பரிமாணங்களின் மேலதிக தகவல்களுக்கு www.ophi.org.uk ஐ பார்க்கவும்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| செயற்திட்ட சுருக்கம் | | vii |
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | உளம் சார்ந்த நல்வாழ்வும், அதன் அளவீடும் | 3 |
| 3. | கற்கை முறைமையியல் மற்றும் கோட்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான மீள்பார்வை | 5 |
| 4. | முடிவுகள் | 9 |
| 5. | கலந்துரையாடலும் அதன் விளைவுகளும | 15 |
| 6. | தீர்மானம் | 17 |
| | நூற்பட்டியல் | 18 |
| | பின்னிணைப்புக்கள் | 20 |

## செயற்திட்ட சுருக்கம்

இக்கற்கை இலங்கையில் உளவியல் மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு, பால்நிலை என்பனவற்றிற்கான தொடர்பினை ஆராய்கின்றது.

அபிவிருத்தியின் முடிவான இலக்குகளாக மகிழ்ச்சியும், நல்வாழ்வும் முக்கியமாக கருதப்படுகின்றன. வருமானம் மற்றும் மகிழ்ச்சி என்பன மிகக் குறைந்த அளவான வருமானத்துடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதை பல ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. இதன் விளைவாக ஆய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் நல்வாழ்வின் பொருள் சாராத தன்மையில் ஆர்வத்தை அதிகரித்துள்ளது. நல்வாழ்வினை அளவிட வருமானமும் நுகர்வும் போதுமானது அல்ல என வளரும் விழிப்புணர்வானது நல்வாழ்வினை நேரடியாக அளவிடுவதற்கான உன்மையான ஆர்வத்தை ஊக்கப்படுத்துகின்றது. இது மகிழ்ச்சியின் மீதான நேரடியான கேள்விகளை தொடர்ந்தும் எழுப்புகின்றது. வறுமையின் பல்பரிமாணப் பகுப்பாய்வானது பல எண்ணிக்கையான குறிகாட்டிகளை அடையாளப்படுத்துகின்றது. இவைகள் காலவோட்டத்திற்கேற்ப பொருளாதார குறிகாட்டிகளில் இருந்து சமூக குறிகாட்டிகளுக்கும் அதிலிருந்து உளரீதியான நல்வாழ்வு போன்ற வறுமையின் உளவியல் குறிகாட்டியாக பரிமாணமடைகின்றன. எவ்வாறாயினும் வறுமையின் சிக்கல் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு தனிப்பட்ட குடும்ப அளவில் சர்வதேச ரீதியில் ஒப்பிடக் கூடிய தரவுகள் குறைவாகவே காணப்படுகின்றன. மேலும் மகிழ்ச்சியை அளவிடும் அளவீட்டு அமைப்பானது பல எண்ணிக்கையான முறைமையியல் சார்ந்த குறைபாடுகளையும், பதிலளிப்பதற்குரிய குறைந்த ஆற்றலையும் கொண்டிருக்கின்றது.

உளம்சார் நல்வாழ்வில் பால்நிலை வேறுபாடுகளை விளங்கிக்கொள்வதானது, சமூகத்தினுடைய சமூக அமைப்பில் ஆண், பெண்ணுடன் படிநிலைகளில் தொடர்பு படுவதையும், சமூக சமத்துவமின்மையையும் விளங்கிக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். அந்த சமூக அமைப்புக்களுள் வள ஒதுக்கீட்டு அதிகாரம், மற்றும் வாய்ப்பு கட்டமைப்புக்களை விநியோகப்பதிலும் உள்ள வேறுபாட்டால் ஆண்களும், பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். அதனால் நல்வாழ்வினை அடைவதற்காக தனி நபர்களை வலுவூட்டுவதற்கு திட்டங்களையும், கொள்கைகளையும் வடிவமைக்கும் போது பால் நிலை வேறுபாடுகளை விளங்கிக்கொள்வதும், கற்றுக்கொள்வதும் மகத்தானதாக இருக்கும்.

இத் தொகுதியானது ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டிற்கான முன்முயற்சியாளரால் (OPITI) உள்ளுணர்வு சார்ந்த குறிகாட்டிகள் அவ்வாறான உளவியல் அல்லது மனநல சுட்டிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இது இலங்கை பதுளை மாவட்டத்தில் முன்னோடியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இத்தொகுதி இலங்கையர்களின் சூழ்நிலையில் நல்வாழ்வின் பல்பரிமாணங்களை விளங்கிக்கொள்ளவும், அளவிடுவதற்குமான ஒரு வளமான தரவுத் தொகுதியினை தருகின்றது.

இவ் அறிக்கை நல்வாழ்வு மற்றும் பால்நிலை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை ஆராய்வதற்கு திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து வரையறுக்கப்படுகின்றது. இதன்படி 97 வீதமான பதுளை மாவட்ட மக்கள் தங்களது மனநல ரீதியான நல்வாழ்வில் திருப்தியாக உள்ளனர் என அறியப்பட்டுள்ளது. ஆனால் இது ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலுள்ள மனநல நல்வாழ்வினை வெளிப்படுத்துவதிலுள்ள வேறுபாடுகளை சுவாரசியமாக வெளிப்படுத்துகின்றது. இக்கற்கையானது, பெண்கள் கூடுதலாக உளவியல் ரீதியாக சீரான நிலையில் உள்ள போதிலும் ஆண்களைவிட உள்ளார்ந்த ரீதியான நல்வாழ்வின் அளவில் குறைந்தளவில் உள்ளதனை குறிப்பிட்டுக் கூறுகின்றது. மகிழ்ச்சியற்ற நிலையானது பெண்கள் மத்தியில் பிரதானமாக வீட்டு சமூக-பொருளாதார பண்புகளுடனும், வருமானம் போன்றவற்றுடனும் வேலைவாய்ப்பு நிலை மற்றும் பிள்ளைகள் என்பவற்றுடனும் தொடர்புபட்டுள்ளது. ஆண்கள் மத்தியில் மகிழ்ச்சியற்ற நிலையானது அதிகமாக வேலைவாய்ப்புடன் தொடர்புபட்டுள்ளது. ஆகவே இவ்வேலைவாய்ப்பு மனநல நல்வாழ்வானது பாரம்பரியமான பெண்களின் வகிபங்கு மற்றும் எதிர்பார்ப்புகளுடன் இலங்கையில் தொடர்புபட்டிருக்கின்றன என பரிந்துரைக்கின்றது. இவ்வேறுபாடுகள் சமூகமயமாதலின் விளைவுகள் மற்றும் ஆண்களும், பெண்களும் மகிழ்ச்சியைவெளிப்படுத்தும் வழியை பாதிக்கும் வழிகள் போன்றவற்றை முன்னிலைப்படுத்துகின்றன. இவ்வாய்வானது இலங்கையில் பால்நிலையின் வகிபங்கு மற்றும் எதிர்பார்ப்புக்கள் பற்றி தெரிந்தவை எவை எனும் தொடர்பில் கலந்துரையாடலையும் விளக்கத்தினையும் முன்வைக்க முனைகின்றது.

# 1. அறிமுகம்



பாலினம் (Gender) எனும் எண்ணக்கரு பாலியல் (Sex) என்பதிலிருந்து வேறுபட்டதாகும். பாலியல் என்பது உடலியல் மற்றும் உளவியல் அம்சங்களை வைத்து ஆண், பெண் என வேறுபடுத்துவதாகும் (Koomba 2001, P.9). மாறாக பாலினம் என்பது சமூகத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. “குறிப்பிட்ட ஏதாவது சமூக சூழலில் எதிர்பார்க்கப்படும் பண்புகள், விழுமியங்கள், மற்றும் நடத்தைகளுடன் ஆண், பெண் ஆக இருப்பதனை குறிக்கின்றது (Koomba, 2001, P.9). சமூகத்தில் ஆண்கள், பெண்களுக்கிடையிலான வேறுபாடானது பொருளாதாரம், சமயம், அரசியல் அமைப்பு, கல்வி, கலாசாரம் போன்ற நல்வாழ்வின் வேறுபட்ட பல்பரிமாணங்களையும் தாண்டி செயல்படுகின்றது. அவர்கள், இனத்துவம், இனம், வர்க்கம், பாலியல் போன்ற சமூக வேறுபாடுகளுடைய வேறு அமைப்புக்களுடன் இடைவினை புரிகின்றனர் (Koomba, 2001, P.9).

நல்வாழ்வு எனும் எண்ணக்கரு சாதாரணமாக சிக்கலான விடயமாகும். இது பல வகைகளில் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் நல்வாழ்வினை மதிப்பீடு செய்வதற்கான அளவீடுகளும் இவ் வரையறைகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்டுள்ளன (Ryan & Deci, 2001). சில ஆய்வாளர்கள் இதனை உளவியல் ரீதியாக ஆரோக்கியமாக இருப்பது அல்லது சிறந்த நல்வாழ்வு போன்ற அணுகுமுறையிலிருந்து வேறுபடுத்துகின்றனர் (Hori, 2010). பொருள்சார் நல்வாழ்வானது பொருட்கள் சார்ந்த ஒன்றினை அடிப்படையாக கொண்டிருக்கின்றது. அதாவது ஒருவர் வெற்றி பெற பொருள் சார்ந்து செயற்படுதல் அல்லது பயன்படுத்துதல் (மகிழ்ச்சியைப் அல்லது விருப்பத்தை பூர்த்தி செய்வதற்கு) ஒருவருக்கான நல்வாழ்வினை கொடுக்கிறது (Saith & Harris, 1998). பொருள் சார் நல்வாழ்வு போன்று, பொருள் நிலை சாரா நல்வாழ்வு வளர்ந்து வரும் நல்வாழ்வு எனும் விடயம் மீதான விமர்சனங்கள் நன்றாக விளங்கிக்கொள்ளப்படவில்லை. மனநலம் சார்ந்த நல்வாழ்வு, நல்வாழ்வின் பொருள் நிலை சார் அம்சங்களை அடைவதன் முடிந்த முடிவாக இருக்கின்றது (Samman, 2007).

உளநலம் சார்ந்த நல்வாழ்வில் பாலினம் சார்ந்த வேறுபாடு காணப்படுவதாக ஆய்வுகள் பரிந்துரைக்கின்றன (Umberson & *et al.,* 1996, PP.837 – 857). உதாரணமாக உறவு முறையானது ஆண்கள் மற்றும் பெண்களின் உளநலம் சார்ந்த நல்வாழ்வில் வேறுபட்ட வகையில் தாக்கம் செலுத்துகின்றது Umberson & *et al.,* (1996). ஆகியோர் சமூக ஆதரவு[4] மற்றும் சமூக ஒருங்கிணைவு ஆண[5] பெண்களின் உறவு முறையில் வேறுபட்ட விளைவுகளை கொண்டிருக்கின்றன என எடுத்துக்காட்டுகின்றனர். சில ஆய்வுகள் ஆண்களை விட பெண்கள் பெரிய சமூக வலையமைப்பை கொண்டுள்ளதாக கூறியுள்ளன. ஆனால் அண்மைக்கால ஆய்வுகள், இவர்கள் மத்தியில் சமூக

[4] சமூக ஆதரவு – அக்கறையுடனான உணர்வு மற்றும் உண்மைத்தன்மை, மற்றவரிடமிருந்து உதவியைப்பெறக்கூடியதாக இருத்தல், உதவும் சமூக அமைப்பின் ஒரு பகுதி, உதவிகள் உணர்வு, நம்பிக்கை, தகவல், துணை சார்ந்த இருக்கும்

[5] தனிநபர்கள்ஃசெயற்பாட்டாளர்கள் ஒருவருடன் ஒருவர் சமூகத்தில் இணைந்திருத்தல்.

வலையமைப்பானது[6] சமமானதாக காணப்படுவதாக கூறுகின்றன (Veroff, Kulka & Douwan 1981 Quoted in Umberson & *et al.,* 1996). முக்கியமாக, பெண்கள் உணர்வு ரீதியான நெருக்கமான உறவினை அதிகமாக கொண்டிருக்கின்றனர். அதே சமயம் ஆண்கள் நிறுவனம் சார்ந்த அமைப்புகளுடன் தொடர்புகளை கொண்டிருப்பதாகவும் சில ஆய்வுகள் அறிக்கைப்படுத்துகின்றன (Moore 1990, Quoted in Umberson & *et al.,* 1996). பெண்கள் ஆண்களை விட சக ஊழியர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்திலிருந்து அதிகமான சமூக ஆதரவைப் பெறுவதாக கூறுகின்றன. ஆனால் இப் பெண்களை ஆண்களுடன் ஒப்பிடும் போது கூடியளவு விகிதாசாரத்தில் மன அழுத்தத்தை வெளிப்படுத்துகின்றனர். இதற்கு பாரம்பரிய எதிர்பார்ப்புக்களுடனான பெண்களின் வகிபங்கு[7] காரணமாகலாம் எனக் கருதப்படுகின்றது (Rosenfield 1980). பெண்களின் வகிபங்கும் பொறுப்புக்களும் அதிகமாக இருக்கின்றன. ஆனாலும் ஆண்களின் பங்கினை விட பெண்களின் பெறுமதி குறைவாகவே இருப்பது போல் தோன்றுகின்றன. அதன் காரணமாக மன அழுத்தத்திற்கு அதிக வாய்ப்பாக அமைவதாக சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Umberson & *et al.,* 1996, PP.837-857). மேலும் ஒவ்வொரு பாலினத்தவருக்குமான சமூகமயமாக்கல்[8] செயற்பாட்டின் விளைவாகவே இவ் வேறுபாடுகள் விளங்கப்படுகின்றன. அவை வெளிப்படுத்துவது வெறுப்பின் வேறுபட்ட வடிவங்களின் அல்லது மனதின் எதிர்மறையான எண்ணங்களின் விளைவாகவேயாகும் (Hori, 2010).

மனநல நல்வாழ்வில் பாலின வேறபாடுகளை விளங்கிக் கொள்ளும் போது அவை இருந்தால் சுய இயல்பாக்கத்தை அடைவதற்கும் அவர்களது முழுத்திறனையும் பயன்படுத்துவதற்கும் சமீப காலத்தில் ஒவ்வொரு தனிநபரும் சுய இயல்பாக்கத்திற்காக[9] வெவ்வேறு முயற்சிகளை முன்னெடுத்தமை முக்கியமானதாகும் (Roothman, *et al.,* 2003). சமூகத்தின் சமூக அமைப்பில் பாலின வேறுபாடுகளும் கூட ஆண்களையும், பெண்களையும் இணைத்து சமூக சமத்துவமின்மையையும், சமூக படிநிலையையும் வெளிப்படுத்துகின்றது. இச் சமூக அமைப்பினுள் வள ஒதுக்கீடுகள், அதிகாரம் மற்றும் வாய்ப்பு கட்டமைப்புக்களின் விநியோகம் போன்றவற்றின் வேறுபாட்டால் ஆண்களும், பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் (Koomba, 2001, P.9). பாலின வேறுபாடுகள் கூட கலை, கலாசாரம் மற்றும் கால ஓட்டத்திற்கு ஏற்ப வேறுபட்டிருக்கிறது. ஆதனால் பாலின வேறுபாடுகளைப் பற்றிய கற்கையும், விளங்கிக்கொள்ளலும், தனிநபர்கள் நல்வாழ்வினை அடைவதற்கான வலுவூட்டலை மேற்கொள்வதற்குரிய திட்டங்களையும், கொள்கைகளையும் வடிவமைப்பதற்கு பெரும் உதவியாக இருக்கும்.

இவ்வாய்வுக் கட்டுரையானது இலங்கையின் பதுளை மாவட்டத்தில் அண்மையில் வறுமை ஆராட்சி நிலையத்தினால் (CEPA)[10] முன்னெடுக்கப்பட்ட வறுமையின் பல்பரிமாணங்களைப் பற்றிய கற்கையை மையமாகக் கொண்டு உளநல நல்வாழ்வின் அனுபவங்களில் ஆண், பெண் வேறுபாடுகளை உதாரணப்படுத்துவதற்கு எழுதப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கு பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்து ஒக்ஸ்போட் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு முயற்சியின் (OPHI)'S தவறிய பரிமாணங்கள் எனும் வறுமைத் தொகுதிக்[11] கூற்றிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. மனநல நல்வாழ்வின் இரு அம்சங்களாக உளவியல் சார்ந்த நல்வாழ்வு மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இது தனிநபருடைய மகிழ்ச்சி மற்றும் வாழ்க்கைத்திருப்தி என்பவற்றில் பாலினத்தின் தாக்கத்தை விளக்க சம்மன் 2007 என்பவரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இக் கடடுரை பின்வருமாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பகுதி 2, அளவீடுகளின் வளர்ச்சி மற்றும் விமர்சனங்களில் கவனம் செலுத்தி எவ்வாறு காலவோட்டத்தில் உளநல நல்வாழ்வு அளவிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பது பற்றிய மேலான பார்வையை தருகின்றது. பகுதி 3, பயன்படுத்தப்பட்ட கோட்பாட்டு ரீதியிலான வேலைத்திட்டம், பகுப்பாய்வுக்கான தரவு வளங்களை அறிமுகம் செய்தல், வினாக்கொத்து மற்றம் அளவீட்டு முறைமையியல் என்பன பற்றிய மேலானபார்வையை தருகின்றது. பகுதி 4, உளவியல் மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வினுடைய பாலினப் பகுப்பாய்வின் முடிவுகளைக் கொண்டிருக்கின்றது. பகுதி 5, கலந்துரையாடல் மற்றும் முடிவுகள். பகுதி 6, பகுப்பாய்வின் முடிவுகளை கருத்தில் கொள்ளும் முடிவுரை.

---

6 உறவு முறையின் மத்தியில் உள்ள அமைப்பு, சமூக அமைப்பு செயற்பாட்டாளர்களால் உருவாக்கப்பட்டிருக்கும்

7 பாலினத்தின் பங்குகள், ஒருவரின் உடை பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்பதின் எதிர்பார்ப்பாகும். பாலியல் அடிப்படையில் பாரம்பரிய பாலின வகிபங்கானது ஆண் வருமானம் ஈட்ட வேண்டும், பெண் வீட்டையும் பிள்ளையும் கவனிக்க வேண்டும்.

8 சுயகௌரவம், சமூகத்தின் எதிர்பார்ப்பு என்பவற்றை கையகப்படுத்துவதற்கான செயற்பாடு, இது சுய பொறுப்பு சார்ந்து தங்கிருக்கச் செய்யும்.

9 உங்களது பூரணமையான திறன் விருத்தியின் செயல் முறையை விளக்க உளவியளாலரான ஆப்பிரகாம் மாஸ்லோவினால் உருவாக்கப்பட்ட சொல். இதன் முதல் விடயம் இது இலக்கு அல்ல, செய்யும் செயலைக் குறிக்கிறது இரண்டாவது விடயம் இது ஒருவரின் உயர்வை இலக்கை கட்டுப்படுத்துவதில்லை. உன்னை பிரபல்யப்படுத்தவும் தேவையில்லை.

10 மேலதிக தகவல்களுக்கு www.cepa.lk ஐ பார்க்கவும்

11 தவறிய பரிமாணங்களின் மேலதிக தகவல்களுக்கு www.ophi.org.uk ஐ பார்க்கவும்

## 2. உளம் சார்ந்த நல்வாழ்வும், அதன் அளவீடும்



வரலாற்றுரீதியாக, உளநலம் சார்ந்த நல்வாழ்வானது பிரதானமாக அக நிலை அடிப்படையில் மதிப்பிடப்பட்டு விளங்கிக் கொள்ளப்படுகின்றது. பொதுவாக உளநல நல்வாழ்வானது ஒரு இன்பத்துக்குரிய பார்வையாக வரையறுக்கப்படுகின்றது. அரிஸ்ரோபனஸ் ஒரு கிரேக்க தத்துவஞானி, பயநெறிமுறைக் கோட்பாட்டாளர்களை பின்பற்றுபவர்கள் மற்றும் யார் வேதனையை தவிர்த்து அதிக சந்தோஷத்தை வெளிப்படுத்துவதை வாழ்க்கையின் இலக்காக நம்புகிறவர்கள், ஆகியோரால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உளவியலில் இன்பத்துக்குரிய நல்வாழ்வானது மனித மகிழ்ச்சி மற்றும் மன சந்தோஷமாக வரையறுக்கப்பட்டுள்ளது. மற்றும் இது மகிழ்ச்சியை அதிகரிக்கும் பொருட்டு வாழ்க்கையின் நல்ல மற்றும் மோசமான கூறுகளை கண்டு பிடிப்பதிலும் கவனம் செலுத்துகின்றது (Kannema *et al.,* 1999 Quoted in hari, 2010). ஒரு அமெரிக்க உளவியலாளரான பேராசிரியர் எட்வேட் டைனெர் 1984 மகிழ்ச்சி பற்றிய கருத்தினை மேலும் விருத்தி செய்ய உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு எனும் எண்ணக்கருவை முன்மொழிந்துள்ளார் (Hori 2010).

உளநல நல்வாழ்வின் உள்ளுணர்வு சார்ந்த வரையறையானது தனிநபர் விருப்பங்கள், ஆர்வங்கள், கருத்துக்கள், பெறுமதிகள் மற்றும் மனப்பாங்குகளுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது (Sckimmack 2009). இது வாழ்க்கை நிகழ்வுகள், தொழில், குடும்பம் நண்பர்கள் போன்ற வெளிக் காரணிகள் மற்றம் எதிர் மறைத் தாக்கங்களின் தணிப்புடனானதற்கான மகிழ்ச்சி, மக்களின் உணர்வு ரீதியான பதில்களின் மதிப்பீடு போன்றவற்றுடன் திருப்தி கொண்டுள்ளது (Joshi 2010). உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வானது இரண்டு வேறுபட்ட கூறுகளைக் கொண்டுள்ளது. பதிலளிப்பவரின் வாழ்க்கையுடனான திருப்தியின் புலனுணர்வு சார்ந்த மதிப்பீடு மற்றும் அனுபவங்களின் எதிர்மறை மற்றும் நேர்மறை தாக்கங்கள்[12] தொடர்பான இன்பத்துக்குரிய மதிப்பீடு என்பனவாகும் (Diener, 1984). ஆகவேதான் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு ஒரு தனி நபரின் உணர்ச்சி, அறிவாற்றல் சார்ந்த விளக்கம், அவருடைய வாழ்வின் மதிப்பீடு போன்றவற்றுடன் தொடர்பு பட்டு காணப்படுகின்றது. எனினும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வானது இன்பத்துக்குரிய அளவீடாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் மனித வாழ்க்கையில் உளவியல் உண்மைகளை காட்டுவது போன்று இன்பத்துக்குரிய அதன் பிரத்தியோகமான வாழ்க்கைக் கூறுகளை வாழ்க்கையுடனான திருப்தி காட்டுகிறதா எனும் விவாதம் இன்னும் இருக்கிறது.

மேலும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வின் அளவீடுகள் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றும் இது தொடர்பான விளக்கங்களும் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன. விமர்சனத்தில் உள நல்வாழ்வின் ஒரு பக்கத்தை மட்டும் உள்ளடக்குகின்றனர். ஊதாரணமாக, இன்பமே சிறந்த நலம் எனும் கோட்பாடு உளநல நல்வாழ்வின் உன்மையான பொருள், தத்துவச் சிக்கல்களை உள்ளடக்க தவறியமை, அவர்கள் அர்த்தம் அல்லது பொருள் நோக்கம் மற்றும் தமது வாழ்க்கையின் இருப்பினை, அர்த்தம் தெரியாமல் உண்மையான முழுத்தன்மையுடன் வாழ முடியுமா என்பதை கவனிக்கத் தவறுதல் மற்றும் தனிப்பட்ட வெளிப்பாட்டுத் தன்மை போன்ற உண்மைக் கூறுகளை அவர்கள் குறிப்பிட தவறுகிறார்கள். மேலும் பொருள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி போன்ற உள்ளுணர்வு சார்ந்த

12 நேர் மற்றும் எதிர்மறை தாக்கங்கள் - மகிழ்ச்சியான, துக்ககரமான உணர்வுகள் மற்றும் மனநிலை

நல்வாழ்விலிருந்து தனித்துவமான ஆனால் பரஸ்பர தொடர்புடைய வேறுபட்ட பரிமாணங்களை பல உளவியல் ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன (Compton *et al.,* 1996).

நல்வாழ்வின் இன்பத்துக்குரிய அணுகுமுறைக்குரிய விமர்சனத்திற்கு பதிலளிக்கும்வகையில் யுடைமோனிக் (Eudaimonic) அணுகுமுறை அமைகிறது. இவ் அணுகுமுறை கூட ஹொலெனிக் தத்துவம் (Hellenic Philisophy) இல் இருந்து பெறப்பட்டது. குறிப்பாக சாக்ரடிஸ் மற்றும் அரிஸ்ரோட்டிலில் இருந்து பெறப்பட்டது. யுடைமோனிக்கை (Eudaimonic) அடைவதற்கு நல்லொழுக்கம் அவசியமாகிறது மற்றும் நல்வாழ்வானது ஒருவரின் உன்மையான இயல்பை புரிந்து கொள்வதில் கூடிய மகிழ்ச்சியை கொண்டிருக்கிறது போன்றவற்றில் இந்த எண்ணக்கரு ஒருமித்து பலமானதாக இருக்கிறது (Waterman 1993). சாக்கிரடிஸ் இன் கருத்துப்படி நல்லொழுக்கம்[13] இல்லாத ஒருவர் சந்தோஷமாக இருக்க முடியாது அதேநேரம் நல்லொழுக்கத்தை உடையவர் சந்தோஷமாக இருப்பதிலிருந்து தவறமாட்டார். யுடைமோனிக் (Eudaimonic) மகிழ்ச்சியால் மட்டும் அமைந்திருக்க வில்லை. அது வாழ்க்கையின் நல்லொழுக்கத்துக்கூடாகவும் அடையப்படும் என்பதை அரிஸ்ரோட்டிலும் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனாலும் நல்லொழுக்கம் சார்ந்த இவரின் கருத்து சற்று வேறுபடுகின்றது. மனிதனின் இறுதி இலக்கானது மனித ஆற்றலை உணர்ந்து கொள்வதே ஆகும் என கி.மு 350 இல் எழுதப்பட்ட அரிஸ்ரோட்டிலின் நிசோமசீன் ஒழுக்கவியல் (Aristotles Nichomachean Ethnics) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (Ryff & Singer,2008).

இச் சிந்தனை மேலும் துன்ப நிலையிலும் சுய ஒழுக்கத்தின் பெறுமதியை வலியுறுத்தும் தன்னடக்கமுடையவர்கள், சிறந்த மதிநுட்பம்[14] ஊடாக சந்தோஷத்தை நாடும் ஜோன் லொக் போன்ற பிரபலமான சிந்தனையாளர்களால் வரலாற்றில் மேலும் விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நவீன யுடைமோனிக்ஸ் (Eudaemonics), தத்துவவாதிகள, வாட்டா மேன் (Waterman) ஆகியோர் தனிப்பட்டவர்களின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியானது மனித ஆரோக்கியத்துடன் தொடர்புபட்டிருப்பதாக வாதிடுகின்றனர் (Waterman etal 2008).

அண்மைக் காலத்தில் உளவியல் பேராசிரியர்கள் கரோல் ரிப்வ் (Carol Ryff, 1995) மகிழச்சியோடு கூடிய இலக்கினை நோக்கிய இயக்கம் மற்றும் நோக்கத்துடனான செயற்பாடுகள் என்று முடிவு செய்துள்ளார். மிக முக்கியமாக அத்தியாவசியமான இறுதிப் புள்ளி எங்களுக்குள் இருக்கின்ற சிறந்த விடையத்தை அடைவதாக இருக்கிறது. ரிப்வ் (Ryff). யுடைமோனிக் (Eudaemonics) உளவியல் சார்ந்த நல்வாழ்வு எனும் எண்ணக்கரு ஊடாக வாதிடுகிறார். அவர் சந்தோஷத்தினை பல்வேறுபட்ட அணுகுமுறைகளில் பகுப்பாய்வு செய்துள்ளார். மற்றும் நல்வாழ்வானது ஆறு கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும். என முடிவு செய்துள்ளார். அவையாவன சுய ஏற்பு, (தன்னையும், வாழ்க்கையையும் பற்றிய மதிப்பீடு) தனிப்பட்ட வளர்ச்சி, வாழ்வின் நோக்கம், மற்றவர்களுடனான நேர்மறை உறவு, சுற்றுச் சூழலுக்கான முதன்மை (ஒருவருடைய வாழ்வு மற்றும் சுற்றுச் சூழலை திறம்பட நிர்வகிப்பதற்கான ஆற்றல்) மற்றும் சுயவாட்சி போன்றவையாகும். மேலும் ரிப்வ் இந்த ஆறு கூறுகளும் உளம் மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நேர்மறையாக ஆதிக்கம் செலுத்துகின்றது. இவை உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்விற்கு அவசியமாக பங்களிப்பு செய்யவில்லை எனவும் குறிப்பிடுகின்றார் (Hori, 2010).

அதனால் உளநல நல்வாழ்வினுடைய வேலைத்திட்டத்தைப் போல் தத்துவவியலில் உள்ள வேறுபாடுகள் பற்றியும் அண்மைக் காலத்தில் சில உளவியலாளர்கள் எழுதியிருக்கிறார்கள். இன்ப வாழ்க்கைக்குரிய அணுகுமுறையில் உள்ள உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வானது நன்கு வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து பெறப்பட்டது. மற்றும் யுடைமோனிக் (Eudaimonic) அணுகுமுறையில் உள்ள உளவியல் சார்ந்த நல்வாழ்வானது தார்மீக நல்லொழுக்கம், சுய வளர்ச்சி மறறும் காரணங்கள் என்பவை இணைந்த ஒரு வாழ்க்கை ஆகும் (Ryff & Singer, 2008). மேலும் உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் சார்ந்த நல்வாழ்வின் குறிகாட்டிகள் வேறுபட்டே காணப்படுகின்றன. ஆனாலும் இவை ஒன்றிலொன்று தங்கியிருப்பதாகவே தெரிகின்றன. இவ் ஆய்வானது ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தாலும் இவ்விரு அணுகுமுறைகளும் முழுமைத் தன்மையுடன் இருப்பதனைக் காட்டுகின்றது.

---

13 நல்லொழுக்கம் - மதிப்புள்ள நல்ல விடயங்களைச் செய்தல் (Rayan &Deci, 2001)

14 மதிநுட்பம் - செயல்களுக்காக காரணத்தை கொண்டிருத்தல், இது கோட்பாட்டறிவில்லை, நடைமுறை சார்ந்த தத்துவ அறிவுஃஞானம். இது உலகளாவிய மற்றும் மாநாத உண்மைகளை கவனிப்பதில்லை இவற்றுடன் ஒருமை, தனிப்பட்ட மாறிகள் கூட நாளாந்த வாழ்வில் கவனிப்பதில்லை வாழ்க்கையின் நோக்கம் மற்றும் அர்த்தம் பற்றி காரணப்படுத்தும் போது புத்திசாலியாக இருக்கலாம் ஆனால் அனுபவம் இல்லாமல் வாழ்வில் நல்ல முடிவை எடுக்க முடியாது மற்றும் உலகலாவிய கோட்பாட்டை நாளாந்த வாழ்வில் பிரயோகிக்க முடியாது எனவும் தெரிந்திருக்க வேண்டும்.

# 3. கற்கை முறைமையியல் மற்றும் கோட்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான மீள்பார்வை



வறுமையினுடைய பல்பரிமாணத் தோற்றப்பாட்டில் உளநல நல்வாழ்வினுடைய இழப்பு நிலை அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. வறுமை[15] பற்றிய பல்பரிமாணப் பகுப்பாய்வானது நல்வாழ்வுடன் தொடர்பான பல பரிமாணங்களையும் குறிகாட்டிகளையும் அடையாளப்படுத்துகின்றது. இவை வறுமையினுடைய பொருளாதாரக் குறிகாட்டிகள், சமூகக் குறிகாட்டிகள், உளவியல் குறிகாட்டிகள் என காலப்போக்கில் வளர்ச்சியடைந்திருக்கின்றன. எனினும் தனிப்பட்ட குடும்ப அளவில் இழப்பு நிலையின் சிக்கல் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு இன்னும் சர்வதேச அளவில் ஒப்பிடக் கூடிய தரவு குறைவாகவே காணப்படுகின்றது. இந்த இடைவெளியை வெளிப்படுத்தவதற்கு ஒக்ஸ்போட் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டுக்கான முன்முயற்சி (OPHI) உளநல நல்வாழ்வு உட்பட ஐந்து பிரதான பரிமாணங்களுக்கான சாத்தியமான சுட்டிகளையும், அளவீடுகளையும் அடையாளப்படுத்தியிருக்கின்றது. இவை தேசிய மட்டத்திலான அளவீட்டிலும், மனித அபிவிருத்தி தொடர்பான கற்கைகளிலும் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளன. வறுமையினுடைய ஐந்து “தவறிய பரிமாணங்கள்” ஆவன வேலைவாய்ப்பினுடைய தரம், அதிகாரம், உடல் ரீதியான பாதுகாப்பு, வெட்கம் மற்றும் அவமானங்கள், உளவியல் மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு என்பனவாகும். அதனால்தான் OPHI தேசிய மற்றும் குடும்ப அளவிலான ஆய்வுகளை ஒருங்கிணைக்கக் கூடியதான வினாக் கொத்தினை வடிவமைத்துள்ளது. இது நைஜீரியா, சாட், இலங்கை போன்ற மூன்று நாடுகளில் பரிசோதித்துப் பார்க்கப்பட்டிருக்கின்றது. (2009/2010 காலப்பகுதியில்)

இலங்கையில் இம் முன்னோட்ட ஆய்வானது பதுளை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது கிராமம், நகரம் மற்றும் மலையகப் பகுதி ஆகிய மூன்று துறை சார் பிரிவுகளைக் கொண்டுள்ளது. மேலும் இலங்கையில் வறிய மாவட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு வறுமை விகிதமானது 17.19% முதல் 51.5% ஆக மாறுபட்ட நுகர்வின் அளவுகளால் கணிக்கப்படுகின்றது. தலை எண்ணிக்கை விகிதவறுமையானது இப்பகுதியில் வறுமை பலதரப்பட்ட பரவலால் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையின் பின்னணியில் பரிமாணங்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் குறிகாட்டிகளை ஆய்வு செய்வதற்கான தரவுகள் பிரதானமாக வீட்டுக் கணக்கெடுப்பின் மூலமும், முக்கிய நபர் நேர்காணல், குழு கலந்துரையாடல் என்பனவற்றின் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த முறைமையியல் ஒரு கலப்பு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் தரவு சேகரிப்பிலும் மற்றும் பகுப்பாய்விலும் எண் ரீதியிலான தரவும், வரையறுக்கப்பட்ட தர ரீதியிலான தரவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வீட்டுத் தரவு சேகரிப்பானது இலங்கைச் சூழலுக்கு ஏற்ப OPHI இன் “தவறிய பரிமாணங்கள்” எனும் தொகுதி[16] மூலம் சேகரிக்கப்பட்டிருந்தது. எழுமாறான மாதிரி நுட்பத்தினைப் பயன்படுத்தி 260 வீடுகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன மற்றும் பதுளை மாவட்டத்தினுள் நிருவாக பிரிவுகளை தெரிவு செய்வதற்கும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. மேலும் முறையான எழுமாற்றுத் தெரிவு மூலம் நேர்காணலுக்கான வீடுகள்

[15] பின்தங்கிய நிலையின் அல்லது குறைந்த நல்வாழ்வின் பொதுவான ஒருமித்த கருத்தாக வறுமை உளது. (Gunawardena, 2004: 10).

[16] வீட்டு வினாக்கொத்தின் பிரதியை http://www.ophi.org.uk/research/missing-dimensions/projects/. இலிருந்து பெறலாம்.

தெரிவுசெய்யப்பட்டிருந்தன. வலது பக்கத்திலுள்ள ஒவ்வொரு ஐந்தாவது வீடும் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. இந்த வீட்டுத் தரவு சேகரிப்பு மாவட்டம் மற்றும் துறை சார்[17] மட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. ஓவ்வொரு நேர்காணலிலும் பதிலளிப்பவராக வீட்டுத் தலைவர் அல்லது மனைவி இருந்தார். மற்றும் பதிலளிப்பவர் மத்தியில் ஆண்களையும், பெண்களையும் சமமாகப் பெறுவதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மொத்தத்தில் 229 நேர்காணல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## அட்டவணை 1: மாதிரி விளக்கம்

| மாதிரி தெரிவு: பிரிவு அடிப்படையில், | ஆண | பெண | மொத்த மாதிரி* | பதுளை மாவட்ட மொத்தம்** |
|---|---|---|---|---|
| தோட்ட பிரிவு | 25% | 16% | 20% | 20% |
| கிராமிய பிரிவு | 70% | 75% | 73% | 73% |
| நகர்ப் பிரிவு | 5% | 8% | 7% | 7% |
| பால் நிலை மாதிரி | 45% | 55% | பொருத்தம் அற்றது | பொருத்தம் அற்றது |
| தொழில் அல்லாத பதிலாளிகள | 20% | 73% | 49% | பொருத்தம் அற்றது |
| வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தலா வருமானம் பெறும் குடும்பங்கள் / பதிலாளிகள | 52% | 51% | 52%[18] | 24%[19] |
| இரண்டாம் நிலை கல்வி மட்டத்தினை விட குறைந்த குடும்பங்கள் / பதிலாளிகள் | 30% | 34% | 32% | பொருத்தம் அற்றது |

* நிறைப்படுத்தப்பட்ட மாதிரி, மாவட்ட மட்டத்திலான பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கான மூலம்: வீட்டுத்தர சேகரிப்பு முடிவுகள் CEPA 2010

** மூலம்: DCS 2007, மற்றும் DCS 2009

*** ரூபா 3079 – தரவுச் சேகரிப்பு காலத்துடன் 2010 ஜனவரி மாவட்ட வறுமைக் கோட்டினை கவனத்தில் கொள்வதற்கு.

இந்த அறிக்கையில[20] பயன்படுத்தப்பட்ட தரவுகள் இரண்டு தனிப்பட்ட தலைப்புக்களில் உளநல நல்வாழ்வின் இழப்பு நிலையினை பகுப்பாய்வு செய்வதற்கு முன்னோட்டமாக செய்யப்பட்ட தரவு சேகரிப்பிலிருந்து பயன்படுத்தப்படுகின்றன.

பகுப்பாய்வின் நோக்கம் :

1) தொகுதியில் முன்மொழியப்பட்ட கேள்விகளின் உள்ளார்ந்த மற்றும் வெளிவாரியான ஏற்புடைமையை வழங்குதல். வெளிவாரியான மதிப்பிடுதல் என்பது இக் கேள்விகள் தரமான வேலை மூலமாக அவர்களது கருத்துக்களை அளவிடுவதற்கு உண்மையில் முயலுகின்றன என்பதனை உறுதி செய்வதாக அமைகின்றன. மற்றும் உள்ளார்ந்த மதிப்பிடலானது புள்ளிவிபர பகுப்பாய்வு மூலமாக குறிகாட்டிகளுக்கிடையிலான தொடர்புகளை விளங்கிக் கொள்வதாகவும் அமைகிறது.

2) மாதிரிகளுள் பாலினத்தால், உளவியல் மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வின் நிலையினையும், பகிர்ந்து கொள்ளப்படுவதனையும் விபரித்தல்.

3) பாலினம், உளவியல் மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வின் குறிகாட்டிகளுக்கிடையிலான குறிகாட்டிகளுக்கிடையிலான தொடர்பினை பகுப்பாய்வு செய்ய ஒரு கூட்டு அளவீட்டினை உருவாக்குதல்.

பகுப்பாய்வானது பல படிமுறைகளில்[21] செய்யப்பட்டிருக்கின்றன. முதலாவதாக விபரிப்பு பகுப்பாய்வானது இனம், மதம், துறை, கல்வி, வருமானம், வேலைவாய்ப்புத்தரம் போன்ற வேறுபட்ட துணைக்குழுக்கள் ஊடாக, பாலினம் மூலம் குறிகாட்டிகளின் பரவலாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கு அனைத்து மாறிகளுக்குமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கேளிவிகளுக்குமான பதில்களுக்கிடையிலான தொடர்பானது பதிலளித்த அமைப்பு குறிகாட்டிகளுள் பாலின வேறுபாட்டை பகுப்பாய்வு செய்வதற்கு

---

[17] வீட்டு மாதிரிகள் நகரத்தில் 30 க்கு மேல் அதிகரிக்க மதிப்பிடப்பட்டிருந்தது.

[18] தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் - இலங்கை, பதுளையில் தவறிய வறுமையின் பல்பரிமாணங்கள் பகுப்பாய்வு

[19] தனிநபர் நுகர்வு அடிப்படையில் - குடும்ப வருமான மற்றும் செலவீன ஆய்வு – 2006/07 மக்கள் தொகை கணெக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம், இலங்கை

[20] மேலதிக தகவல்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட சுட்டிகளின் கலந்துரையாடல், samman (2007) பார்க்கவும்

[21] பின்னிணைப்பு 1,2 ஐ பார்க்கவும்.

பொருத்தமானதாக இருந்தது என்பதை உறுதி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. பல பொருள் கொண்ட உண்மைகளின் கேள்விப் பகுப்பாய்வானது பதில்கள் அனைத்து இடங்களிலும் பதில்களின் அமைப்பு முன் கூட்டியே கணிக்கப்பட்டிருப்பது போல் அதே காரணிகளுடன் பொருந்துகின்றதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதனுடைய முடிவுகள் பயன்படுத்தப்பட்ட குறிகாட்டிகளின் இழப்பு நிலையினை விளங்கிக் கொள்வதற்கான கூட்டு குறியீடுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும். பரஸ்பர பகுப்பாய்வானது பாலினம் மற்றும் வேறுபட்ட மாறிகள், குறிகாட்டிகள் மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சமனான அல்லது பொருத்தப்பாடுடைய எண்ணக்கருக்களை அளவிடுவதற்கான கருத்துக்களின் பரிமாணங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை தீர்மானிக்க பயன்படுத்தப்படுகிறது.

கூட்டு குறியீடுகள் இரண்டு நிலைகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது வேறுபட்ட குறிகாட்டிகள் மூலம் பாலினம் ரீதியிலான வறுமை நிலையினை அளவிடுவதற்கு காரணப் பகுப்பாய்வு அல்லது உண்மைப் பகுப்பாய்வினை பயன்படுத்தி உளவியல் அல்லது உள்ளார்ந்த நல்வாழ்வின் பரிமாணங்களுடைய குறிகாட்டிகளுக்கான கூட்டுக் குறியீடு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்காக சுட்டிகளுக்குள் உள்ள மாறிகள் சரிசமமாக[22] மதிப்பிடப்பட்டுள்ளன. மீண்டும் பரிமாணத்தினுள் உள்ள குறிகாட்டிகள் சமமாக மதிப்பிடப்பட்டிருக்கின்றன. மாறிகள், பரிமாணங்கள், சுட்டிகளுடைய இழப்பு முறையானது தொழிற்சங்க அணுகுமுறையின்[23] பிரகாரம் அளவிடப்பட்டிருக்கின்றன. இழப்பு நிலையின் செறிவினை விளங்கிக் கொள்வதற்கு பரிமாணங்களில் உள்ள இழப்பு நிலையைப் போல் ஏதாவது சுட்டிகளின் இழப்பு நிலை கருதப்படுகின்றது.

பரிமாணத்தினுள் எவ்வாறு இழப்பு நிலை அல்லது குறிகாட்டிகள் மாற்றத்திற்கு பங்களிப்பு செய்கின்றன, அல்லது சந்தோஷம், வாழ்க்கைத்திருப்தி மற்றும் பாலினம் போன்ற பரிமாணங்களுள் சில ஏனைய குறிகாட்டிகள் மீதான தாக்கம் போன்றவற்றை விளங்கிக் கொள்வதற்கு இறுதியாக அளவையியல் ரீதியிலான பின்னடைவுப் பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

[22] சுட்டிகளுள் ஒவ்வொரு மாறியும் சமமாக மதிப்பிடப்பட்டுள்ளது அனைத்து பதிலாளிகளும் சமமாக முக்கியப்படுத்தப்பட்டு, கவனத்திற்கொண்டு அனைத்து பதில் மாறிகளையும் அனுமதிக்கின்றது.

[23] Alkire, S. & Foster, J., 2008. *Counting and Multi-dimensional Poverty Measurement,* OPHI Working Paper No. 7., Oxford: University of Oxford.



# 4. முடிவுகள்

இப்பகுதி எவ்வாறு ஆண்களும், பெண்களும் உளவியல் சார்ந்த நல்வாழ்வுக்கான அனுபவங்களை கொண்டிருக்கின்றார்கள் என்பதனை சம்மன் (Samman 2007) கூறிய உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் ரீதியான நல்வாழ்வின் விடையங்களின் பிரகாரம்அளவிடுவதாகும்.

## 4.1 உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு: வாழ்க்கை திருப்தியும் சந்தோஷமும்

உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வினை பகுப்பாய்வு செய்ய இரண்டு குறிகாட்டிகள் பயன்படுத்தப் படுகின்றன. அவை வாழ்க்கை திருப்தியும், சந்தோஷமும் ஆகும். எதிர்மறை[24] தாக்கங்களை மிஞ்சிய நேர்மறையான மேலோங்கிய தாக்கங்களே சந்தோஷமாக விபரிக்கப்பட்டிருக்கின்றன (Bradburn, 1959). மற்றும் குறுகிய கால சூழ்நிலைகளில் பதிலளிக்க கூடியதாகவும் விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது (Samman, 2009). பதுளையில் பெறப்பட்ட தரவுகள் இரு பாலினத்தவர் முழுவரிலும் மொத்த மகிழ்ச்சியானது உயர்ந்த நிலையில் இருப்பதாக காட்டுகிறது. ஏறத்தாழ 90% ஆன மக்கள் மிக்க மகிழச்சியுடன் உள்ளனர். என்றும் அதிகமான பெண்கள் (12.4%) ஆண்களுடன் (7%) ஒப்பிடும் போது அனைத்து மகிழ்ச்சியிலும் தாம் மிகவும் சந்தோஷமாக இல்லை[25] என பதிவு செய்துள்ளனர். இக் கண்டுபிடிப்புக்கள் வருமானம், வேலைவாய்ப்பு நிலை, சிறுவர்கள் போன்ற சமூக பொருளாதார பண்புகளுடன் இம் மகிழ்ச்சியற்ற நிலை தொடர்புபட்டுள்ளது எனக் காட்டுகின்றனர். பெண்கள் அவர்கள் தொழில் புரிவதற்கான வாய்ப்பு கிடைத்தால் அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்துவதோடு குடும்ப வருமானத்தில் பங்கெடுக்கவும் முடியும் என நினைக்கின்றனர். மேலும் நல்ல சமூக பொருளாதார நல்நிலையுடன் தொழில் புரியும் பெண்கள் நல்ல கல்வியறிவு உடைய பின்ளைகளை கொண்டிருப்பதுடன் காலப்போக்கிற்கு ஏற்ப தமது வாழ்க்கை மாற்றங்களையும் சந்தோஷத்தையும் கொாண்டிருக்கின்றனர்.

> நான் சந்தோஷமாக இருக்கின்றேன், இந்த நிலைக்கு என் குழந்தைகளைக்கொண்டுவருவதற்கு நான் மிக கடினமான நேரங்களைச் சந்தித்துள்ளேன். அவர்கள் இன்னும் தங்கள் கல்வியை முடிக்க வேண்டும். அவர்கள் நன்றாகப் படித்தால் என்னால் சந்தோஷப்பட முடியும். எங்களின் வீட்டினை கட்டி பூர்த்தி செய்ய முடியும் எனது பங்கினை நான் பூர்த்தி செய்துள்ளேன் அதனால் நான் சந்தோஷமாக இருக்கின்றேன்.
>
> - 40 வயதான பெண்மணி

இதற்கு மேலதிகமாக குறைந்த சமூக பொருளாதார நிலையின் எதிர்மறை விளைவுகளின் வெளிப்பாடான சமூக ஒப்பீடாக செயன்முறை விளைவுகளைக் காட்டுகின்றது. இதனை ஏழைகளாக உள்ள தனிநபர்கள், பாலினத்தை மதிக்காதோர், மற்றவர்களுடன் தங்களை சாதகமற்ற முறையில் ஒப்பிடுபவர்கள், வளங்களை பெற முடியாததாக நினைப்பவர்கள் சமத்துவமற்ற நிலையை உணர்ந்தால் சரிசெய்ய முடியும்.

[24] நேர் மற்றும் எதிர்மறை தாக்கங்கள் - மகிழ்ச்சியான, துக்ககரமான உணர்வுகள் மற்றும் மனநிலை

[25] பின்னிணைப்பு 4 ஐ பார்க்கவும்

කුඹුරු වැඩ කරද්දී සමහර වෙලාවට හිතෙනව ඇයි අපි දුප්පත් වෙලා ඉපදුනේ කියලා. ගමේ සමහර අයගෙ මට්ටමට වඩා අපි පහළින් ඉන්න කොට අපි නිතරම එයාලගේ උසුලු විසුලු වලට ලක් වෙනවනේ. අපි වගේම දුප්පත් අය අතරේ අපිට අසාධාරණයක් වෙන්නේ නැහැ. අපිට වඩා ලොකු අය අතරේ ඉන්නකොට තමයි අපිට අසාධාරණ විදිහට සළකන්නේ.

நாங்கள் வயலில் வேலை செய்யும் போது சில நேரம் ஏன் நாம் ஏழையாகப் பிறந்தோம் என யோசிப்பதுண்டு ஏனெனில் நாங்கள் ஏனையோரை விட தாழ்நிலையில் உள்ளமையால் பிறர் எங்களை கேலிக்குரியவர்களாகப் பார்க்கின்றனர். எங்களைப் போன்ற ஏழை மக்ககளின் மூலம் எமக்கு எந்தவித அவமானமும் ஏற்படுவதில்லை ஆனால் எம்மை விட உயர்ந்தமட்டத்தவர்களுடன் இருக்கும் போதே அவர்கள் எம்மை இழி நிலையில் மதிப்பிடுகின்றனர்

- 42 வயது ஆண்

உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வினுடைய இரண்டாவது சுட்டியாக வாழ்க்கையின் திருப்தி இருக்கின்றது. இது இரண்டு மாறிகளைக்[26] கொண்டுள்ளது. அவை முழுமையான வாழ்க்கைத் திருப்தி[27] மற்றும் விசேடமான வாழ்க்கைத் திருப்தி. இவற்றை ஊரஅஅசைஎ (1969) என்பவர் வாழ்க்கைத் திருப்திக்காக பொதுவான வகையில் தொடர்புபட்டிருப்பதாக வாதிடுகின்றார். இவருடைய கருத்தின் பிரகாரம் இவை ஒட்டுமொத்த வாழ்க்கை திருப்திக்கு பிரத்தியேகமான மாறுபாட்டினை தருகின்றது. ஆனால் இந்த தனிப்பட்ட பங்களிப்புக்களை முழுமையான வாழ்க்கைத்திருப்திக்கு எந்தளவு பொருத்தமானது அல்லது முக்கியமானது என நினைக்கின்றார்கள் என்பதை கருத முடியாதுள்ளது. அவர் மேலும் அவர்களது திருப்தியின் அளவில் நின்று முடிவுகளை எடுக்கும் போது இது போன்றவற்றில் பொருத்தப்பாடு அல்லது முக்கியத்துவத்தினை புறக்கணிக்க முடியும். உதாரணமாக திருப்தியில் சம அளவில் மக்கள் ஏனையவர்கள் மீது சில அறிவுப்புலங்களை உயர்வாக மதிப்பிடக்கூடும். இந்தப் பகுப்பாய்வில்அனுமானிக்கும் அனைத்து அறிவுப் புலங்களும் சம முக்கியத்துவம் உடையதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றன.

இதன் கண்டுபிடிப்புக்கள் இரு பாலினத்தவர் மத்தியிலும் முழுமையான வாழ்க்கைத் திருப்தியின் உயர்ந்த அளவினைக் காட்டுகின்றன. உணவு, உள்ளூர் பாதுகாப்பு, குடும்பம், கௌரவம், மற்றவருக்கு உதவும் திறன், மற்றும் மதம் போன்ற செயற்களங்களுடன் 90% ஆனோர் திருப்தியாக இருக்கின்றனர். முக்கியமாக ஆண்களுடன் ஒப்பிடும் போது சுதந்திரமான தெரிவினை மேற்கொள்ளக்கூடிய அவர்களின் திறன்களுடன் திருப்தியற்ற நிலையில் பெண்கள் இருக்கிறார்கள். பண்பு ரீதியான தரவுகள் சுதந்திரமான தெரிவினை மேற்கொள்ளும் பெண்களின் திறன் மற்றும் வருமானம், வேலை, கல்வி போன்ற வாழ்க்கையின் செயற்களங்களுக்கு இடையிலான தொடர்பினை விளக்குகின்றது. மற்றும் குறைந்த பொருளாதார சுதந்திரம், குறைந்த கல்வி அறிவு மற்றும் வேலையின்மை போன்றவை பெண்களின் சுதந்திரமான தெரிவினை மேற்கொள்வதற்கான திறனை பின்தள்ளுவதாக உணர்த்துகின்றன. எனினும் மற்றொரு முக்கியமான உண்மை குடும்பத்தினுள் உள்ள பாரம்பரிய ஆணாதிக்கமானது இப் பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. பண்பு ரீதியான தரவில் ஆண்கள் நாளாந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப முடிவுகளை எடுப்பதற்கு அனுமதிக்கின்றனர். மற்றும் மரியாதையின் பொருட்டு ஆண்களால் எடுக்கப்பட்ட முடிவுகளை பெண்கள் ஆதரிக்கின்றனர் என பல இடங்களில் பெண்கள் குறிப்பிட்டுள்ளனர்.

මහත්තයා තමයි ගොඩක් දේවල් තීරණය කරන්නේ, ඒක මට සතුටක්

கணவர் தான் அதிகமானவற்றை முடிவு செய்கிறார். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கின்றது.

- 42 வயதுப் பெண்மணி

இக் கற்கையானது விசேடமான வாழ்க்கைத்திருப்தியின் செயற்களங்களுடன் தொடர்புபட்ட இரண்டு முக்கிய முடிவுகளை வெளிப்படுத்துகின்றது. ஆண்களை, பெண்களுடன் ஒப்பிடும் போது நண்பர்களை கொண்டிருப்பதுடன் குறைந்த திருப்தியுடன் இருக்கின்றனர். இது வளர்ந்தவர்களுக்கான சமூகத்திற்கு எதிரான தன்மை என ஆண்களை விளக்குகின்றது (Myers 1992). மற்றும் உளவியல் சார்ந்த

[26] பின்னிணைப்பு 2 ஐ பார்க்கவும

[27] பின்னிணைப்பு 5 ஐ பார்க்கவும

நல்வாழ்வில் எங்கெல்லாம் ஆண்கள் மக்களுடன் நல்ல முறையில் தொடர்புகளை பேணும் நிலையில் குறைவாக இருக்கிறார்களோ அவர்கள் தொடர்புகளின் மையங்களுக்கு வருகின்றனர் என்பது முக்கியமான மற்றமொரு கண்டுபிடிப்பாக இருந்தது. இரண்டாவது கண்டுபிடிப்பாக பெண்கள் அவர்களது சுகாதார நிலை பற்றிக் குறைந்தளவான திருப்தியுடன் உள்ளனர் எனத் தெரிகிறது. இச் சுகாதாரப் பிரச்சினைகள் சிலவேளை அவர்களுடன் நேரடியாக தொடர்பு பட்டுள்ளது. அதேநேரம் குடும்பத்தில் உள்ள ஏனையவர்களின் சுகாதார நிலை தொடர்பாகவும் இவர்கள் கவலைப்படுகின்றனர் மற்றும் இது அவர்களது வாழ்க்கைத்திருப்தியைப் பாதிக்கின்றது. இது மேலும் பெண்களின் பாரம்பரியமான பராமரிப்புத் தன்மையினையும் விளக்குகின்றது.

> எனது கணவர் ஒரு இருதய நோயாளி ஆரம்பத்தில் அவர் கூலித்தொழிலாளியாக வேலை செய்தார். ஆனால் கடந்த 7 – 8 மாதங்களாக அவரால் நெஞ்சு வலி காரணமாக வேலை செய்ய முடியவில்லை. அவர் சிகிச்சை பெறாவிட்டால் அவருக்கு வலி ஏற்படுகின்றது. இதனால் அவர் தியத்தலாவ வைத்தியசாலைக்கு சென்று மருந்து பெற வேணடியுள்ளது. தொடர்ச்சியாக இரண்டு பேரும் இப்ப உழைப்பதில்லை. எங்களின் பிள்ளைகளின் சம்பாத்தியத்திலேயே வாழவேண்டியுள்ளது.
>
> \- 52 வயதான பெண்மணி

ஒட்டு மொதத்தப் பார்வையில் உண்மைப் பகுப்பாய்வினைப் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத்திருப்தி எனும் கலவையினுள் முழுமையான "வாழ்க்கைத்திருப்தி" மற்றும் "விசேட வாழ்க்கைத்திருப்தி" என வகைப்படுத்தப்படுகின்றன. பின்தங்கிய நிலையில் உள்ள மாதிரிகளில் வாழ்க்கைத்திருப்தி எனும் கலவைக்கான குறிப்பிடத்தக்க பாலின வேறுபாடுகள் எதுவுமில்லை. ஆனால் அங்கு மகிழ்ச்சியுடன் தொடர்புபடுகின்ற நேர்மறையான குறிப்பிடத்தக்க தொடர்பு ஒன்று உள்ளது. வாழ்க்கைத்திருப்தியில் பின்தங்கிய நிலையில்[28] இருப்பவர் மத்தியில் மகிழ்ச்சி இன்றி இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நான்கு மடங்கு அதிகமாக காணப்படுகின்றன.

எனினும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வானது மகிழ்ச்சி மற்றும் வாழ்க்கைத்திருப்தி நல்வாழ்வின் உள்ளுணர்வு சார்ந்த நிலையின்[29] அனுபவங்களில் ஆண்கள், பெண்களுக்கிடையில் எந்தவொருவேறுபாடும் இல்லை.

## 4.2 உளவியல் சார்ந்த நல்வாழ்வு : வாழ்க்கையின் அர்த்தமும் சுய நிர்ணயமுமு

இக் கற்கையில் உளவியல் சார்ந்த நல்வாழ்வானது மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வுற்பத்திக் கோட்பாட்டினுடைய அணுகுமுறைகளின் அடிப்படையில் அளவிடப்பட்டிருக்கிறது. அவையாவன வாழ்க்கையின் அர்த்தம[30] மற்றும் சுயநிர்ணயக் கோட்பாடாகும[31]. இது எந்த அளவிற்கு வாழ்க்கையின் அர்த்தத்தினை கொள்வது மற்றும் அதன் சீரான செயற்பாட்டினுடைய[32] மூன்று அடிப்படைக் கூறுகள் அவை தனி மனிதனின் உளவியல் சார் நல்வாழ்விற்கு எந்தளவு பங்களிப்பு செய்கின்றன போன்ற விடயங்களை ஆராய்கின்றது.

பதுளையில் பெறப்பட்ட தரவுகள் ஆண்களும், பெண்களும் வாழ்க்கையை அர்த்தப்படுத்துவதில்[33] குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை கொண்டிருப்பதாக பரிந்துரைக்கின்றன. இக் கற்கை பெருமளவானோர் (75%) பதிலாளிகள் தமது வாழ்க்கை பற்றிய நல்ல அர்த்தத்தினை விளங்கிக் கொண்டுள்ளதாக கண்டுபிடித்துள்ளது. வறுமை நிலையில் உள்ளவர் மத்தியில் (25%) ஆன சனத்தொகை கூடுதலான ஆண்கள் (33%) பெண்களை விட (19%) வறுமை நிலையில் உள்ளனர். சுவாரஸ்யமாக, அங்கே மூன்று குறிகாட்டிகளில் ஆண்களின் வறுமை நிலை கூடிய செறிவுடையதாக உள்ளது. அவையாவன வாழ்க்கையின் தெளிவான அர்த்தம் அல்லது நோக்கத்தை கொண்டிருத்தல் வாழ்க்கையின்

---

28 பின்னிணைப்பு 4 ஐ பார்க்கவும்

29 பின்னிணைப்பு 4 ஐ பார்க்கவும்

30 Samman, E., 2007. *Psychological and Subjective Wellbeing: A Proposal for Internationally Comparable Indicators,* Oxford: University of Oxford.

31 வாழ்வின் அர்த்தத்தினுடைய கருத்தியலை நிறைவு செய்ய நல்லதை நோக்கி முயலும் திறன். சுயலயடெ ரூ னுநஉடை 2001

32 வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் கொடுப்பது என்பதுனுடைய தெளிவான அர்த்தம், மற்றும் நோக்கம், திருப்மியான அர்த்தம், தெளிவான அர்த்தம்

33 பின்னிணைப்பு 3 ஐ பார்க்கவும்

அர்த்தத்துடன் திருப்தி கொண்டிருத்தல் மற்றும் வாழ்க்கைக்கான அர்த்தமாக என்ன கொடுக்கப்படுகிறது என்பதற்கான தெளிவான அறிவைக் கொண்டிருத்தல் என்பனவாகும். ஆண்கள் கஸ்டமான சூழ்நிலைகளின் கீழ் வீட்டில் ரொட்டியின் வெற்றியாளராக இருப்பதன் தாக்கத்தாலும் மற்றும் அவர்களது வேலையின் தன்மையினால் பொறுப்புக்கள் பாதிக்கப்பட்டமையாலும் இவ் இழப்பு நிலையினை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

> මම රස්සාවක් කරන එක මගේ පවුලට වැදගත්. අපි ගොවිතැන් කටයුතු කරන්නේ පරම්පරාවෙන්. අත්දැකීමෙන් තමයි ගොවිතැන් කරන්නේ. අපේ මහන්සිය තිබුනට සමහර වෙලාවට පොළවත් එක්ක හැප්පෙන්න අමාරුයි.
>
> எனது தொழில் என் குடும்பத்திற்கு முக்கியம், பரம்பரையாக நாம் நெல்வயல் தொழிலில் ஈடுபட்டுள்ளோம். இதனை எமது அனுபவம் ஊடாக மேற்கொள்ளுகின்றோம். எமக்கு அனுபவமிருப்பினும் சிலவேளைகளில் பூமியுடன் போராடுவது மிகக்கடினமாகும்.
>
> - 43 வயதான ஆண்

மேலும் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் ஓரளவு வாழ்க்கைக்கு கொடுக்கும் அர்த்தம் பற்றிய தெளிவான அறிவினைக் கொண்டுள்ளனராக அதிகமான பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த அறிவு கூட உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்விற்கு பங்களிப்பு செய்வதாக தெரிகின்றது. அவர்களது பிள்ளைகள் நன்றாக படிக்கும் போது, நல்ல வேலை பெறும் போது, நல்ல குடும்ப வருமானம் தரமான வீட்டினைப் பெறும் போது அவர்கள் வாழ்க்கை பற்றிய கூடுதலாக திருப்தியடைவதாக காட்டுகின்றது. அவர்களுடைய வாழ்க்கைத்திருப்தி மற்றும் உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு பற்றிய சிந்தனையானது மற்றொன்றுடனான இணைப்புத் தன்மையைக் கொண்டிருப்பதாக காட்டுகின்றது இது வாழ்க்கையின் அறிவுப் புலங்கள் அவர்களுடைய வாழ்க்கைக்கு கொடுக்கப்பட்ட அர்த்தம் பற்றிய தெளிவான அறிவானது அவர்களுக்கு நல்லதொரு திருப்தியைக் கொடுத்திருக்கிறது என்பதனை விளக்குகின்றது.

> எனக்கு சின்ன கவலை என்னால் முழுமையாக வீட்டினை கட்டி முடிக்கவில்லை என்று. ஆனால் என்னுடைய குழந்தைகளை சிறப்பாக வளர்த்துள்ளேன். அவர்களை சிறப்பாக படிப்பித்துள்ளேன். இன்று அவர்கள் சமூகத்தில் நல்ல நிலையில் உள்ளார்கள். இது எனது மிகப்பெரிய அடைவு
>
> - 51 வயதான பெண்

வாழ்க்கை பற்றிய அர்த்தத்தின் பின் தங்கிய நிலையானது வேறுபட்ட மக்களில் உள்ள வித்தியாசமான அடிப்படையிலான நோக்கங்களில் இருந்து எழுகின்றது. மற்றும் அதனால்தான் உளவியல் ரீதியான ஆரோக்கியத்தில் நேர்மறையானதும் எதிர்மறையானதுமான தாக்கங்கள் இருக்கின்றன **(ளுயஅஅயெ 2007)**. இக்கற்கையானது வேலைவாய்ப்பிற்கும் வாழ்க்கையின் அர்த்தப்பாட்டிற்கும் இடையில் ஒரு குறிப்பிடத்தக்க நேர்மறைத் தொடர்பை காட்டுகிறது எனினும் வேலை செய்யும் ஆண் பெண்களுக்கு இடையில் 77% ஆன ஆண்கள் வாழ்க்கையின் திருப்திகரமான அர்த்தத்தினை கண்டுபிடிப்பதில் மிக பின்தங்கிய நிலையில் இருக்கினறனர் எனச் சுட்டிக்காட்டுகின்றது. தொழில் புரிவதன் மூலம் வீட்டுத் தேவைகளைப் பரிமாறுதல் போன்ற அவர்களுடைய சமூகரீதியிலான பொறுப்புக்களைப் பற்றியதான மன அழுத்தம் ஆண்களிடம் தோன்றுவதாக தரரீதியிலான பகுப்பாய்வில் பிரதிபலிக்கின்றது. ஆகவே வாழ்க்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அர்த்தத்தினை அடைவது கடினமான விடயம் என அவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நல்லதொரு வேலைத் தெரிவு இருப்பதாக தெரியவில்லை. ஆனால் தொழில் செய்வதற்குரிய கட்டாயம் இருப்பதாக உணருகின்றனர்.

> මෙච්චර කාලයක් තිසිසේ ජීවිතයට අරමුණක් හෙව්ව. තාමත් හොයනව. අපි හැමදාම හිතන්නේ කවදාහරි මේ වලෙන් ගොඩ එන්න ඕනේ කියලායි. අපි හරියට අසරණ වෙනවා. අපේ ජීවිත ගැන අපිට ඕනේ විදිහට තීරණ ගන්න අපිට නිදහසක් නැහැ. උදේම ගෙදරින් ගියාම එන්නෙ හවසට, විවේක ගත්තොත් අපිට කන්න ලැබෙන්නෙ නැහැ.
>
> இவ்வளவு காலமாக எனது வாழ்விற்கான நோக்கத்தினை தேடிக்கொண்டிருந்தேன். இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன். இதிலிருந்து விடுதலை பெற ஒவ்வொரு நாளும் நாங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் பேரழிவுக்குட்பட்டிருக்கிறோம். எமது வாழ்க்கையில் முடிவுகளை எடுப்பதற்கு எமக்கு சுதந்திரமில்லை நாம் வேலைக்காக காலையில் புறப்பட்டு மாலையில் வீடு திரும்புகிறோம். நாங்கள் ஓய்வெடுத்தால் பட்டினி ஏற்பட்டு விடும்.
>
> - 35 வயதான ஆண்

பெண்கள் அர்த்தம் பற்றி வேறுபட்ட விளக்கத்தினைக் கொண்டிருக்கின்றனர். அங்கே அதிகமான பெண்கள் குடும்ப வருமானத்திற்கான செயற்பாட்டில் ஈடுபடாமல் உள்ளனர். மேலும் பெண்கள் தாங்கள் படித்தவர்களாகவும் திறமையானவர்களாகவும் இருப்பதாக நினைக்கின்றனர். மேலும் தாங்கள் தொழில் புரிவதன் ஊடாக சமூக ரீதியாக பரிந்துரைக்கப்பட்ட பாலினத்தில் பெண்களின் பாரம்பரிய வகிபங்கானது நிறுத்தப்பட்டிருப்பதாகவும் நினைக்கின்றனர். இக் கற்கையில் அவர்கள் வாழ்வில் கலாச்சாரப்பின்னணியால் கொடுக்கப்பட்டுள்ள இயல்பானது பெண்கள் ஆண்களைவிட கல்வியறிவுடையவர்களாக இருந்தாலும் ஆண்கள், பெண்கள் எப்பொழுதும் வீட்டில் தங்க வேண்டும் மற்றும் அவர்களின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கு உதவ வேண்டும் என எதிர்பார்க்கின்றனர் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் குடும்பத்திற்கு உதவுவதால் ஏற்பட்ட வேலைவாய்ப்பின்மையானது அவர்களது பொருளாதார சுதந்திரம் மற்றும் முடிவெடுக்கும் அதிகாரம் என்பவற்றை இழக்க காரணமாக இருக்கிறது.

> எனது கணவருக்கு நான் வேலை செய்வது பிடிக்காது நான் வீட்டிலிருந்து பிள்ளைகளை வளர்க்க வேண்டும். அதுமட்டுமல்ல அவரின் பெற்றோரையும் கவனிக்க வேண்டும் திருமணத்திற்கு முன் நான் வேலை செய்தேன். அப்பொழுது என்னிடம் பணம் இருந்தது அதனை நான் செலவிட்டேன். ஆனால் இப்பொழுது என் கணவனில் தங்கியுள்ளேன். எனக்கு வேலை இருந்தால் அவருக்கு உதவி செய்ய முடியும். ஆனால் அவர் அவரால் எல்லாம் முடியும் என்று சொல்கிறார்.
>
> - 40 வயதான பெண்

பல ஆய்வாளர்கள் வாழ்க்கையின் அர்த்தத்தினை வரையறுக்கவும், கோட்பாடுகளை உருவாக்குவதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கைத்திருப்தி மற்றும் மகிழ்ச்சியுடன் நேர்மறையாக தொடர்புபட்டுள்ள பல அர்த்தப்பாடுகளை கண்டு பிடித்துள்ளனர் (Steger, F.M. & *et al.,* 2006). இரட்டை அளவையியலின் ஒப்பீட்டுப் பகுப்பாய்வானது வாழ்க்கைக்குரிய அர்த்தப்பாட்டிலிருந்து[34] மகிழ்ச்சிக்கும், வாழ்க்கைத்திருப்திக்குமான குறிப்பிடத்தக்க பங்களிப்பு இருப்பதாக உறுதிசெய்கின்றது. வாழ்க்கையின் அர்த்தப்பாட்டில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆண்களும், பெண்களும் மகிழ்ச்சியில் மூன்று மடங்கு பின்தங்கியுள்ளனர். முழுமையான வாழ்க்கைத்திருப்தியில் ஐந்து மடங்கு பின்தங்கியுள்ளனர். அதேசமயம் ஆண்கள் இரண்டு மடங்கு பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். மேலும் இது நல்வாழ்வின் உள்ளுணர்வு சார்ந்த அம்சங்களுடன் வாழ்க்கையின் அர்த்தத்திற்கும் இடையிலான தொடர்பை வீளக்குகின்றது.

அடுத்த அணுகு முறையாக சுய நிர்ணயக் கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது. இக் கோட்பாடு யான் (Ryan) மற்றும் டெசி (Deci) ஆகியோரால் உருவாக்கப்பட்டுள்ளது. இவை உள்ளார்ந்த அடிப்படைத் தேவைகளுடைய இருப்புடன் தொடர்புபட்டதாகும். இவை வாழ்க்கையின் அர்த்தத்தை அடையக் கூடிய திறனில் தாக்கத்தை செலுத்துகின்றது (Ryan & Deci, 2001). இம் மூன்று உளவியல் அடிப்படைகளாவன சுதந்திரம் - சொந்த வாழ்க்கையின் முகவராக இருப்பது ஒன்றை செய்வதற்கான தெரிவினைச் செய்ய வேண்டும். ஆற்றல் - ஒன்றைச் செய்யும் போது தன்னம்பிக்கையுடன் இருப்பதாக நினைக்க வேண்டும். இணைவு – நெருக்கமானதும், பாதுகாப்பானதுமான மனித தொடர்புகளை கொண்டிருக்க வேண்டும். அதே சமயம் சுதந்திரத்தை மதித்தல் மற்றும் ஆற்றலுக்கான வசதியை ஏற்படுத்தவும் வேண்டும் . சுய நிர்ணயக் கோட்பாடானது இத் தேவைகள் திருப்தியடைந்திருக்கும் போது தூண்டுதல்களும், நல்வாழ்வும் மேம்பட்டிருக்கின்றன மற்றும் அவை வரையறுக்கப்பட்டிருக்கும் போது எமது வாழ்வில் எதிர்மறை தாக்கங்கள் இடம் பெறுகின்றன என வலியுறுத்துகின்றது.

ஒட்டு மொத்தத்தில் அங்கே பதிலளித்தவர்கள் மத்தியில் சுய நிர்ணயத்தின் இழப்பு நிலையானது குறைவாகவே இருந்தது. இது ஆண், பெண்கள் மத்தியில் குறிப்பிட்ட எந்த வேறுபாடுகளையும் கொண்டிருக்கவில்லை. இணைவு குறிகாட்டி தவிர இக்கற்கையின் போது அதிகமான ஆண்கள் (25%) பெண்களுடன் ஒப்பிடும் போது பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். (12%) மேலும் பெண்களுடன் ஒப்பிடும் போது ஆண்கள் மக்களுடன் இணைந்திருக்கும் நிலை குறைவாகவே உள்ளது. இவர்கள் தொடர்புகளுக்குள் வருகின்றனர். மற்றும் தொடர்ச்சியாக தொடர்பு கொள்பவர்களுடன் மிக நெருக்கமாகவே உள்ளனர். எனவும் விளக்குகின்றது. குறிப்பிட்ட வாழ்க்கைத்திருப்தியில் ஆண்கள் தமது நண்பர்களுடன் குறைந்தளவான திருப்தியுடன் இருப்பதாக வெளிக்காட்டப்பட்டிருக்கின்றது. இதை முறையான சங்கங்களில் அவர்களின் முன்னுரிமையை விளக்கலாம். அதே சமயம் பெண்கள் அதிகமாக உணர்வு பூர்வமாக உறவு முறையுடன் உள்ளனர்.

[34] பின்னிணைப்பு 3 ஐ பார்க்கவும்

வழமையாக, ஒருவரை புரிந்து கொள்ள எனக்கு பல நாள் எடுக்கும், சாதாரணமாக சந்திக்கும் ஒருவருடன் ஒருபோதும் இறுக்கமான தொடர்பு வைத்திருப்பதில்லை.
- 41 வயது ஆண்

சுதந்திரத்துடன் தொடர்பாக ஆண், பெண் மாதிரிகளில் அவர்களுடைய வாழ்க்கையில் 80% வீதத்திற்கும் மேலாக சுதந்திரம் இருந்துள்ளது. பின்தங்கிய நிலையில் இருப்பவர் மத்தியில் ஏறத்தாழ 10% மான இன பாலினத்தவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை எப்படி முன்னெடுப்பது என்பதை சுதந்திரமாக தீர்மானிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். மற்றும் குறிப்பாக ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் தமது எண்ணங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குரிய குறைந்தளவான நேர்மறை கருத்தினைக் கொண்டுள்ளனர். இது கூட விசேட வாழ்க்கைத்திருப்தி செயற்பாட்டில் பெண்கள் அவர்களது சுதந்திரமான தெரிவை வெளிக்காட்டுவதிலும் அவர்களுடைய வாழ்க்கையில் கட்டுப்பாடுகளை முன்னெடுக்கவும் குறைந்தளவான திருப்தியைக் கொடுக்கின்றது. பண்புரீதியான தரவானது, பெண்களின் வேலையில்லாத் தன்மையுடன் தொடர்புடையதாக வெளிப்படுத்துகின்றது. கண்டுபிடிப்புக்களின் பிரகாரம் சமூக ரீதியாக எதிர்பார்க்கப்படுகின்ற பெண்களின் பராமரிப்பாளர் எனும் பங்கினுள் அவர்கள் அதிகமாக பொருளாதார ரீதியாக ஆண்களிடம் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இக்கற்கையானது பிரதான வருமானம் ஈட்டுனரின் கருத்துக்கு பெண்கள் ஆதரவு தெரிவிப்பதாக காட்டுகின்றது. அதே நேரம் பிரதான வருமானம் ஈட்டுனருக்கு அழுத்தத்தை அதிகரிக்கும் வகையில் அவர்கள் மாற்று வழிகளை பரிந்துரைப்பதுமில்லை என்பதையும் காட்டுகின்றது.

ஆண், பெண்களுடைய திறமை உயர்ந்த அளவில் (90%) இருந்தாலும் ஆண்கள் தாங்கள் திறமையானவர்கள் என்கின்ற அதேநேரம் சாதிக்க நினைக்கும் உணர்வில் குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். அதே சமயம் பெண்கள் தங்களை பிறர் திறமையானவர்களாக ஒப்புக் கொள்வதனை சொல்ல விரும்புவபர்களாக உள்ளனர். ஆனால் அவர்கள் தங்களை மிகத் திறமையானவர்களாக நினைக்கின்றனர். இது அவர்களது தொழில் நிலையுடன் தொடர்புபட்டிருக்கின்றது என்பதனை பண்பு ரீதியான தரவு காட்டுகிறது. சமூக மற்றும் குடும்ப அழுத்தங்கள் காரணமாக அதிகமான ஆண்கள வேலை செய்வதற்குப் போதுமான திறன் இல்லாமல் இருந்தாலும் கூட அவர்கள் பணம் செலுத்தும் வேலைகளில் ஈடுபட்டிருக்க நினைக்கின்றனர். அங்கு 73% ஆன பெண்கள் வேலை இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். மேலும் பதுளை மாவட்டத்தில் உள்ள மக்கள் வாழ்வாதாரம் சார்ந்த விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். தெரிவு செய்த மாதிரிகளில் 45% ஆன ஆண்கள் விவசாயத்துறையில் விவசாயிகளாக அல்லது நாட் கூலியாளர்களாக இருந்தனர். நிலத்தின் மலைப்பாங்கான தன்மை, வறட்சி போன்ற புவியியல் இடர்பாடுகள் வாழ்வாதார செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் காரணிகளாக இருக்கின்றன. இது அவர்கள் இயலாதவர்களாகவும் ஆற்றல் இல்லாதவர்களாகவும் நினைப்பதற்கு பங்களிப்பு செய்வதாக இருக்கலாம்.

சுய நிர்ணயத்தினை ஒரு கூட்டு நிலையில் விளங்கிக் கொள்வதற்கு உளவியல் தேவைகளின் மூன்றினையும் ஒன்றாகச் சேர்த்து இப் பகுப்பாய்வானது ஆய்வு செய்கின்றது. என்றாலும் 30% ஆன மக்கள் சுய நிர்ணயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதாக புள்ளிவிபர ரீதியாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் சுவாரஸ்யமாக சுய நிர்ணயத்தின் பின்தங்கிய நிலையானது ஒட்டுமொத்த வாழ்க்கைத்திருப்தியினுடைய பின்தங்கிய நிலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை கொண்டிருக்கின்றது. சுயநிர்ணயத்தில் பின்தங்கிய நிலையில் இல்லாதவர்களை விட, பின்தங்கி இருப்பவர்களிடம் மொத்த வாழ்க்கைத்திருப்தியில் பின்தங்கி இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் நான்கு மடங்கு அதிகமாக காணப்படுகின்றது.

மேலும் உண்மைப் பகுப்பாய்வினைப் பயன்படுத்தி உளவியல் சார்ந்த நல்வாழ்வானது வாழ்க்கையின் அர்த்தத்தினதும், சுய நிர்ணயத்தினதும் கூட்டு அளவீடாக பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. சுருக்கமாக உளவியல் சார்ந்த நல்வாழ்வானது பதிலளித்தவர் மத்தியில் 40% பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. ஆனால் அவாகள் மத்தியில் பெண்களை விட 35% ஆண்கள் (49%) மத்தியில் பின்தங்கிய நிலை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து இருக்கிறது. மேலும் பாலினத்தை சாராத மொத்த வாழ்க்கைத்திருப்தியானது சந்தோஷத்தின் பின்தங்கிய நிலையுடன் உளவியல் சார்ந்த நல்வாழ்வின் பின்தங்கிய நிலையுடன் தொடர்புபட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக, உளநல நல்வாழ்வினை ஒரு தொகுப்பாக பகுப்பாய்வு செய்வதற்கு அகவய ரீதியான நல்வாழ்வினதும், உளவியல் சார்ந்த நல்வாழ்வினதும் கூட்டு அளவீட்டுக் காரணிகள் சேர்ந்தே இருப்பதாக இப் பகுப்பாய்வு காட்டுகின்றது. (சுவாரஸ்யமான விடையமானது), இக் கூட்டு முக்கியமாக 97% மானது, மொத்த சனத்தொகையின் உளநல நல்வாழ்வில் பின்தங்கியிருக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றது.

## 5. கலந்துரையாடலும் அதன் விளைவுகளும



உளநல நல்வாழ்வில் பாலின சமத்துவமற்ற தன்மை குறிப்பாக சந்தோஷத்தின் அடிப்படையில் விமர்சனப்படுத்தப்பட்டிருக்கின்றன[35]. நல்வாழ்வினுடைய அகவய ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான கருத்துக்களானது மக்கள் தங்களின் தரம் மற்றும் வாழ்வின் பொருள் சார்ந்த மற்றும் பொருள் சாராத கருத்தியல்களை எந்தளவு உள்ளுணர்வு சார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதனை வளங்குகின்றன. இவை நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் என்பவற்றை வடிவமைப்பதற்கு உதவ முடியும். இக் கட்டுரையானது நல்வாழ்வின் அளவினை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற மற்றும் வளர்ந்து வருகின்ற திட்டங்களுக்கு உதவுவதற்கு அனுபவம் சார்ந்த பகுப்பாய்விலிருந்து ஆதாரங்களை முன்வைப்பதற்கு முயற்சிக்கின்றது.

இக் கட்டுரையின் பகுப்பாய்வானது பதுளை மாவட்டத்தில் பெருமளவான சனத்தொகையினர் உளநல நல்வாழ்வில் பின்தங்கிய நிலையில் இல்லை என்பதனைக் காட்டுகின்றது. ஆனாலும் உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் சார்ந்த நல்வாழ்வின் சுட்டிகளுடைய பகுப்பாய்வானது இச் சுட்டிகளுள் குறிப்பிடத்தக்க அளவு பின்தங்கிய நிலையில் இருப்பதாக காட்டுகின்றது. அதேபோல் ஆண்கள், பெண்களுக்கிடையிலான வேறுபாட்டையும் காட்டுகின்றது. இது கூட்டு அளவீடுகளை விட தனிப்பட்ட மாறிகளின் அம்சங்களில் கவனம் செலுத்துவது முக்கியமானது எனப் பரிந்துரைக்கின்றது. கூட்டு அளவீடுகள், வேறுபட்ட மாறிகள் மற்றும் சுட்டிகளை ஒன்றிணைப்பதன் மூலம் கட்டமைக்கப்பட்டிருக்கிறன. கூட்டு குறியீட்டினை அமைக்கும் போது சில பெறத்தக்க தகவல்கள் அல்லது நிலைமைகள் தரவின் சாராம்சத்தை முன்னெடுக்கும் போது தவிர்க்கப்படுகின்றன. இவை சில தரவுகளில் இழப்பினை ஏற்படுத்துகின்றது இது இறுதி முடிவினையும் பாதிக்கின்றது. அதனால் இறுதித் தொகுப்பினுள் தனிப்பட்ட சுட்டிகளினுடைய ஆழமான பகுப்பாய்வுடன் ஒப்பிடும் போது இறுதித் தொகுப்பானது சிறிய வேறுபாடுகளைக் காட்டலாம். அதனால் தான் நுண்ணிய மற்றும் பெரும் அளவில் முடிவுகளைப் கவனிப்பது அவசியமாகிறது.

இக் கற்கையானது உள்ளுணர்வு சார்ந்த மற்றும் உளவியல் சார்ந்த நல்வாழ்வின் சில குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க பாலின வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. இவற்றில் ஒன்றாகதாதான் பெண்கள் உள்ளுணர்வு சார்ந்த சுட்டிகள் மற்றும் மாற்றங்களில் அதிகம் பின்தங்கியிருக்கின்றார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது. பெண்களின் மகிழ்ச்சியற்ற தன்மையானது வருமானம், கல்வி, சிறுவர்கள் போன்ற சமூக பொருளாதாரப் பண்புகளுடன் தொடர்புபட்டிருக்கின்றது. ஆண்கள் மகிழ்ச்சியற்றிருக்கும் நிலையானது அது குறிப்பாக அவர்களது தொழில் நிலையுடன் தொடர்புபட்டிருக்கின்றது.

இது ஆண் பெண்களுடைய பாரம்பரிய பாலினத்தவரின் வகிபங்கினுடைய எதிர்பார்ப்புக்களை குறிக்கின்றது. சமூக நெறிமுறையின் படி தமது குடும்பத்திற்கான பராமரிப்பினை வழங்குவதற்கான பொறுப்புக்களை பெண்களே கொண்டிருக்கினறனர். இது பதுளையில் பரந்த அளவில் காணப்பட்டது. அங்கே அதிகமான பெண்கள் வேலை இல்லாதவர்களாக இருந்திருந்தார்கள். அவர்கள் ஆரம்ப பராமரிப்பாளர்களாக இருந்தனர். அவ்வாறே குடும்பத்தில் பிரதான வருமானம் ஈட்டுனர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குபவர்களாகவும் உள்ளனர். இவ் வேலையில்லாப் பெண்கள் உளவியல சார்ந்த நல்வாழ்வினுடைய சில சுட்டிகளில் பின்தங்கிய நிலையினை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பெண்கள் அவர்களது எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் பின்தங்கிய நிலையில் இருப்பதற்கே முனைகின்றனர். இவை தொழில் நிலையில் அவர்களது சுதந்திரமான தெரிவை

[35] Samman (2007) ஐ பார்க்கவும்

வெளிப்படுத்துவதற்கு குறையான திறனைக் கொண்டிருத்தல் மற்றும் பொருளாதார குறைந்த சுதந்திரத்தின் அளவு என்பவற்றுடன் தொடர்பு படுகின்றது. இருந்தாலும் ஆண்களை விட அதிகமாக கற்றவர்களாகவும், அதிக திறனுடையவர்களாகவும் இருக்கிறார்கள். சமூக அமைப்பு மற்றும் குடும்ப அங்கத்தவருடைய எதிர்பார்ப்புக்களின் படி அவர்கள் வீட்டில் தங்கி மற்றவர்களை கவனிக்க வேண்டியிருக்கின்றது.

மேலும் வாழ்வின் குறிப்பிட்ட செயற்பாட்டுக் களங்களினுடைய திருப்தியுடன், பெண்கள் வாழ்க்கையின் அர்த்தத்தினை நேர்மறையான தொடர்புகளைக் கொண்டிருந்தமையானது மிகவும் முக்கியமான விடயமாக இருந்தது. அவர்கள் அவர்களுடைய பிள்ளைகள் நல்ல கல்வியறிவுடன் நல்ல தொழிலில் இருக்கும் போது, நல்ல குடும்ப வருமானத்தினை பெறும் போது, சிறந்த வீட்டில் வசிக்கும் போது வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தினை கொடுப்பது என்ற தெளிவான அறிவுடையவர்களாக உள்ளனர். என்றாலும் அவர்கள் வீட்டில் தங்கி பிள்ளைகளையும், குடும்பத்தாரையும் பராமரிக்க வேண்டியிருக்கிறது. இது அவர்களுடைய வாழ்க்கையின் அர்த்தம் என்று கருதி அவர்களது வகிபங்கினையும் அவர்களுக்கிருக்கின்ற அறிவினையும் ஏற்றுக்கொள்கின்றனர். அதனால்தான் அங்கே பெண்ணுக்கான ஒரு வாய்ப்பான செலவீனம் இருக்க முடிகிறது. ஏனெனில் வீட்டில் தங்கியிருப்பது, பிள்ளைகளைப் பராமரிப்பது, கணவரின் வேலைக்கு உதவுவது போன்றவை ஒரு தொழிலிலிருந்து சம்பாதிக்கக் கூடியதை விட கூடுதலான பயனை பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறது.

இக்கற்கையானது, பதுளை மாவட்டத்தில் ஆணாதிக்கத்துடனான குடும்ப கட்டமைப்புச் சூழலினுள், வேலைவாய்ப்பின்மை மற்றும் பெண்களின் வாழ்விற்கு என்ன அர்த்தம் கொடுக்கப்படுகிறது என்பவற்றுக்கிடையிலான தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துகின்றது. ஆகவே நல்வாழ்வினை மேம்படுத்த முன்னெடுக்கப்படும் திட்டங்களானது பெண்களுக்கான வேலை வாய்ப்புக்களை வீட்டு மட்டத்தில் உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இவை பராமரிப்பாளர்களாக இருப்பவர்களுக்கு நெகிழ்வுத் தன்மையை கொடுக்கிறது. அதேபோல் குடும்ப வருமானத்திற்கான மேலதிகமான வளங்களை வளங்குகின்றது. மற்றும் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்கவும் வழிவகுக்கின்றது.

ஆண்கள் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் கொடுத்தல் மற்றும் இணைவு போன்ற உளவியல் சார்ந்த நல்வாழ்வின் சுட்டிகளுடைய கூடிய பின்தங்கிய நிலையினை அறிக்கைப்படுத்தியுள்ளனர்.

இக் கற்கை, தெளிவான பொருள் அல்லது வாழ்க்கையின் நோக்கம், வாழ்க்கையின் அர்த்தத்தின் திருப்தியை கொண்டிருத்தல் மற்றும் வாழ்க்கையின் அர்த்தத்திற்கு என்ன பொருள் கொடுத்தல் எனும் தெளிவான அறிவு என்பவற்றில் கீழ் நிலையில் இருப்பதாக காட்டுகின்றது. ஆண்கள் குடும்ப வருமானத்தை ஈட்ட வேண்டும் என்ற அழுத்தத்தில் இருப்பதனால் அவர்கள் வேலை செய்ய வேண்டும் மற்றும் குடும்பத் தேவைகளை கவனிக்க வேண்டும் எனும் பாரம்பரிய வகிபங்கினை எடுக்கின்றார்கள். ஆனால் அவர்கள் எப்பொழுதும் இவற்றுடன் திருப்தியடைவதில்லை என எடுத்துக் காட்டுகின்றது. இது பதுளை மாவட்டத்திற்குரிய சிறப்பான விடயமாக இருக்கலாம் மற்றும் வரையறுக்கப்பட்ட வேலைவாய்ப்பு இருக்கின்ற மற்றும் ஆண்கள் விவசாயத் துறையில் கடினமான வேலையில் பிரதானமாக பங்கெடுத்தல் போன்றவை உள்ள இதைப்போன்ற பிரதேசங்களுக்கும் பொருத்தமானதாக இருக்கலாம். அதனால் தான் ஆண்கள் கூடிய கடினமான உழைப்பில் கடினமான தொழில் புரிபவராக செயல்பட வேண்டி உள்ளது.

இக் கற்கை சமூக உறவு முறையின்[36] வாழ்க்கை திருப்தியினுடைய பார்வையில், ஆண்களுக்கான குறிப்பிடத்தக்க கையறு நிலையினை எடுத்துக் காட்டுகிறது. அவர்களுடைய பங்கு குடும்பத்திற்கான குறிப்பிட்ட வருமானத்தை வளங்குபவராக இருப்பதனால் அது மேலும் ஆண்களை தனிமைப்படுத்தியிருக்க முடியும். மற்றும் குறிப்பிட்ட சில சூழ்நிலையில் அவர்களுடைய சமூக உறவு முறை பின்தங்கியிருக்கவும் முடியும். உளநல நல்வாழ்வு பற்றிய நூல்களின் பிரகாரம், பெண்களுடன் ஒப்பிடும் போது ஆண்கள் சமூகத்தில் உள்ள மக்களுடன் கூடுதலாக முறையான தொடர்புகளையே வைத்துள்ளனர். அதே சமயம் பெண்கள் உணர்வு பூர்வமான நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளனர். அது சக ஊழியர்கள், நண்பர்கள், வயது வந்த பிள்ளைகள், உறவினர்கள் பொன்றவர்களிடமிருந்து அதிகமான சமூக உதவிகளை பெறுவதற்கு உதவும்.

சார்ந்த நல்வாழ்வினையும், உளநல நல்வாழ்வினையும் பாதிக்கின்றது என்பதை மேலும் பகுப்பாய்வு செய்ய இந்த மாதிரிகள் போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன் இப் பின்தங்கிய நிலையினை கையாள்வதற்கு பரந்த பண்பு ரீதியிலான பகுப்பாய்வு தேவைப்படுகிறது என்பதனையும் முன்னிலைப்படுத்துகிறது.

---

36 காலப்போக்கில் சில சமூக இடையூடாட்டம் இவ்வுறவு நேர்மறையாக அல்லது எதிர்மறையாக இருக்க முடியும்.

## 6. தீர்மானம்



இவ் ஆய்வானது இலங்கையின் பதுளை மாவட்டத்தில் உளநல நல்வாழ்வினை அனுபவிப்பதில் பாலின வேறுபாடுகளின் சிக்கல் தன்மையினை ஆராய்கின்றது. இவ் ஆய்வினுடைய கண்டுபிடிப்புக்கள் பதுளையில் 97மூ ஆன மக்கள் உளநல நல்வாழ்வில் பின்தங்கிய நிலையில் இல்லை எனினும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் உளநல நல்வாழ்வின் அளவுகள் வேறுபடுகின்றன எனக்காட்டுகின்றன. இக் கற்கை கூடுதலாக ஆண்களும், பெண்களும் உளநல நல்வாழ்வினை அனுபவிக்கும் வழிகளில் உள்ள சமூகமயமாக்கலின் தாக்கங்களை பிரதானப்படுத்துகின்றன. இவ் ஆய்வின் கண்டுபிடிப்புக்களானது பெண் பதிலாளிகள் தமக்கு பாரம்பரிய வகிபங்கான பராமரிப்பாளர்கள் என்பதுடன் கூடுதலான பொருளாதார அதிகாரத்தையும் கேட்கின்றனர். ஆனால் வீட்டில் உள்ள ஆணாதிக்க அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எந்த ஆசையையும் குறிப்பிட வில்லை.

அவ்வாய்வானது ஏனைய ஆய்வுக் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உளநல நல்வாழ்வினை மதிப்பிடுவதன் பொருட்டு உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு மற்றும் உளவியல் நல்வாழ்விற்கிடையிலான தொடர்பினையும் ஆராய்கின்றது. இந்த இரண்டு பரிமாணங்கள் உள்ள மாறிகளும் சுட்டிகளும் உட்தொடர்புகளைக் கொண்டிருப்பதுடன் சிலவேளைகளில் அவை ஒன்றை ஒன்று முழுமைப்படுத்த முனைகின்றன. அவர்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையில் அவர்கள் திருப்தியாக இருப்பதினால் இது அவர்களுடைய வாழ்க்கை அர்த்தம் உடையதாகவும் சந்தோஷமாக இருப்பதாகவும் காட்டுகின்றது. மேலும் இது வாழ்க்கை குறிப்பிட்ட பகுதிகளில் திருப்திப்படும் அனுபவமானது மக்களை மகிழ்ச்சியாக இருக்க வழிவகுப்பதோடு மறுபக்கத்தில் மக்கள் தமது அர்த்தம் உள்ள வாழ்க்கையின் திருப்தியை அடைவதாக உணரப்பட்டுள்ளது. என்பதனையும் விளக்குகின்றது.

அத்துடன் மக்கள் வாழ்க்கை பற்றிய அவர்களுடைய வேறுபட்ட கருத்தியல்களில் எவ்வாறு வாழ்க்கைத்திருப்தியானது தங்கியிருக்கின்றது என்பதையும் அது இறுதியாக அவர்களுடைய உளவியல் நல்வாழ்வினை பாதிப்பதாகவும் இது விளக்குகின்றது.

இவ்விரண்டு வேறுபட்ட கண்ணோட்டங்கள் அவர்களது வாழ்க்கையை நோக்கிய மனப்பாண்மையூடாக வருகின்றது. இந்த வாழ்க்கையின் வேறுபட்ட மனப்பாண்மைகள் வேறுபட்ட வழிகளில் வாழ்க்கை விடயங்களை முன்னெடுக்க வழிவகுக்கின்றது. மற்றும் அது அவர்களை வேறுபட்ட வழிகளில் மீள பின்பற்றவும் வழிவகுக்கின்றது. இவை காலப்போக்கில் அவர்களுடைய வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டுவரவும் வழிவகுக்கின்றது. ஆகவே நல்வாழ்வினை அடையும் பொருட்டு வாழ்க்கையை நோக்கியதான அவர்களின் மனப்பாண்மையினை மாற்றுவதன் மூலம் மக்களின் மென்திறன்களை வலுவூட்டுதல் முக்கியமானதாகும்.

பதுளை மாவட்டத்தின் பின்னணியில் வாழ்க்கையின் அர்த்தத்தால் உளவியல் நல்வாழ்வில் சுட்டிக்காட்டப்படும் பெண்களின் தமது சுதந்திரமான விருப்பங்களை வெளிக்காட்டுவதற்கான திறனானது சமமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவை போன்ற சில உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வின் சுட்டிகள் பெண்களின் பின்தங்கிய நிலைக்காக காரணப்படுத்தப்பட்டிருப்பதனையும் இக் கற்கை முதன்மைப்படுத்துகின்றது. அதனால் திட்டங்களையும், கொள்கைகளையும் வகுக்கும் போது இவ்வாறான சில பின்தங்கிய நிலையினை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு அவைகள் வேறுபட்ட சூழ்நிலைகளில் அவர்களின் பெறுமதி அமைப்பினைப் பாதிக்கும் என்பது தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமாகும். இது கூட சமூகமயமாக்கலின் தாக்கம் சார்ந்து எவ்வாறு மக்களின் தனிப்பட்ட விருப்பங்கள் சமூகமயப்படுவதில் தங்கியிருக்கின்றன என்ற செயல்முறை மீதான பார்வையைச் செலுத்துவது முக்கியமானதாகும்.

## நூற்பட்டியல்


Alkire, S., 2007. *The Missing Dimensions of Poverty Data: Introduction to the Special Issue.* Oxford: Oxford Development Studies. pp. 347 – 359. Print.

Alkire, S., & Foster J., 2008. *Counting and Multi-dimensional Poverty Measurement,* Oxford Poverty and Human Development Institute, Working Paper No. 7. Oxford: University of Oxford. Print.

Bradburn, N.M., 1969. *The Structure of Psychological Wellbeing.* Chicago: Aldine. Print.

Csikszentmihalyi, M., 1999. "If We Are So Rich, Why Aren't We Happy." *American Psychologist,* Vol. 54(10). Print.

Diener, E., 2000. "Subjective wellbeing: The science of happiness, and a proposal for a national index." *American Psychologist.* Vol. 55(1): pp 34-43. Print.

Diener, E., 1984. "Subjective Wellbeing." *Psychological Bulletin.* Vol. 95 (3), pp. 542–575. Print.

Fodor, E., 2006. "Different Type of Gender Gap: How Women and Men Experience Poverty." *East European Politics and Societies.* Vol. 11(3) (Fall): pp 470-500. Print.

Gunewardena, D., 2004. *Poverty Measurements: Meanings, Methods and Requirements.* Colombo: Centre for Poverty Analysis. Print.

Hori, M., 2010. "Gender Differences and Cultural Contexts: Psychological Wellbeing in Cross-national Perspective." Dissertation submitted to the Graduate Faculty of the Louisiana State University and Agricultural and Mechanical College for the degree of Doctor of Philosophy. Available online:
http://etd.lsu.edu/docs/available/etd-04202010-122318/unrestricted/Hori_Diss.pdf.

Ickes, W., 1993. "Traditional Gender Roles: Do They Make, and then Break, our Relationships?" *Journal of Social Issues.* Vol. 49(3) pp. 71-85. Print.

Joshi, U., 2010. "Subjective Wellbeing by Gender." *Journal of Economics and Behavioral Studies*. Vol. 1(1) pp. 20 -26. Print.

Kahneman, D. & Krueger, B., 2006. "Developments in the Measurement of Subjective Wellbeing." *Journal of Economic Perspectives.* Vol. 20 pp 3–24. Print.

Kuumba M. B., 2001. *Gender and Social Movements.* Jaipur: Rawat Publications. Print.

Peterson, C., Park, N., & Seligman, M.E.P., 2005. "Orientations to Happiness and Life satisfaction: The Full Life versus the Empty Life." *Journal of Happiness Studies.* Vol. 6(1) pp 25–41. Print.

Roothman, B., Kirsten, D. & Wissing, M., 2003. "Gender Differences in Aspects of Psychological Wellbeing." *South African Journal of Psychology.* Vol. 33(4) pp 212-218. Print.

Rosenfield, S., 1980. "Sex Differences in Depression: Do Women Always Have Higher Rates?" *Journal of Health and Social Behavior.* Vol. 21, pp 33-42. Print.

Ryan, M. & Deci, E., 2001. "On Happiness and Human Potentials: A Review of Research on Hedonic and Eudaimonic Wellbeing." *Annual Review of Psychology,* Vol. 55, pp. 141-166. Print.

Ryff C., & Keyes, M., 1995. "The Structure of Wellbeing: Psychological Wellbeing Revisited." *Journal of Personality and Social Psychology.* Vol. 69(4) pp. 719-727. Print.

Saith, R. & Harriss, B., 1998. *Gender Sensitivity of Wellbeing Indicators.* Discussion Paper No. 95, Switzerland: United Nations Research Institute for Social Development. Available online: http://www.unrisd.org/unrisd/website/document.nsf/d2a23ad2d50cb2a280256eb300385855/2e3f47202fad83dc80256b67005b6ff2/$FILE/dp95.pdf

Samman, E., 2007. Psychological and Subjective Wellbeing: *A Proposal for Internationally Comparable Indicators.* Oxford:University of Oxford. Print.

Sanjeewanie, K.I.H., de Silva, N. & Shivakumaran, S., 2012. *Multi-dimensional Poverty Among Samurdhi Welfare Recipients in Badulla District, Sri Lanka.* PMMA Working Paper 2012-03. Canada: Partnership for Economic Policy. Print.

Schimmack, U., 2009. "Wellbeing: Measuring Wellbeing in the SOEP." *Schmollers Jahrbuch 129: Journal of Applied Social Science Studies.* pp. 1–9.

Sen, A., 1999. *Development as Freedom.* Oxford: Oxford University Press. Print.

Sen, A., 2003. "Development as Capability Expansion" in Fukuda-Parr, S., & Shiva Kumar, A.K., *Readings in Human Development.* Oxford: Oxford University Press. Print.

Sen, A., 1985. "Wellbeing, Agency and Freedom: The Dewey Lectures 1984." *The Journal of Philosophy.* Vol. 82(4) pp.169-221. Print.

Steger, M.F., Frazier, P., Oishi, S. & Kaler, M., 2006. The Meaning in Life Questionnaire: Assessing the Presence of and Search for Meaning in Life, *Journal of Counseling Psychology,* American Psychological Association, Vol. 53(1) pp. 80–93. Print.

Steger, M., in press. "Assessing Meaning and Quality Of Life," in Geissinger, K., (ed.) APA *Handbook of Testing and Assessment in Psychology,* Washington DC: American Psychological Association. Print.

Steger, M. F., Oishi, S., & Kesebir, S., 2011. "Is a Life without Meaning satisfying? The Moderating Role of the Search for Meaning in Satisfaction with Life Judgments." *Journal of Positive Psychology.* Vol. 6 pp. 173-180. Print.

Stevenson, B. & Wolfers, J., 2009. "The Paradox of Declining Female Happiness.", *American Economic Journal: Economic Policy 2009.* Vol. 1(2) pp.190–225. Print.

Umberson, D., Slaten, E., Hopkins, K., House, J.S., & Chen, M.D, 1996. "The Effect of Social Relationships on Psychological Wellbeing: Are Men and Women Really so Different." *American Sociological Review.* Vol. 61(5) pp. 837-857. Print.

Waterman, A.S., Schwartz, S.J., & Conti. R., 2008. "The Implications of Two Conceptions of Happiness (Hedonic Enjoyment and Eudaimonia) for the Understanding of Intrinsic Motivation." *Journal of Happiness Studies.* Vol. 9(1) pp 41-79. Print.

## பின்னிணைப்பு 1: சுட்டிகள்/மாறிகள்/பரிமாணங்கள் என்பவற்றுள் ஒன்றிணைந்து பின்பற்றப்பட்ட படிமுறைகள் – உளவியல் சார்ந்த நல்வாழ்வு

| சுட்டிகள | | மாறிகள் | மாறிகளின் குறை நிலைக்கான தெரிவு முறைகள் | சுட்டிகளின் குறை நிலைக்கான தெரிவு முறைகள் | | பரிமாணங்களின் குறை நிலைக்கான தெரிவு முறைகள் |
|---|---|---|---|---|---|---|
| வாழ்க்கையின் அர்த்தம | | வாழ்வு தெளிவான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், பதில் எல்லா நேரமும் உண்மையில்லாமல் இருந்தால் அல்லது சிறிது உண்மை என்றால் - பற்றாக்குறையாக உள்ளது | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், தெளிவான அர்த்தம் அல்லது திருப்தியான அர்த்தம் அல்லது அர்த்தப்பாடுடைய அறிவு குறை நிலையில் உள்ளதால் - வாழ்வின் அர்த்தத்திலும் குறைநிலை உள்ளது. | | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், வாழ்வின் தெளிவான அர்த்தம் அல்லது தன்னம்பிக்கை குறைநிலையில் உள்ளதால் - உளவியல் சார்ந்த நல்வாழ்விலும் குறைநிலை உள்ளது. |
| | | திருப்திகரமான வாழ்க்கைக்கான அர்த்தத்தை/காரணத்தை கண்டறியவில்லை | | | | |
| | | எனது வாழ்க்கைக்கு அர்த்தம் தரக்கூடிய தெளிவான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை | | | | |
| சுயநிர்ணயம் | சுதந்திரம | எனது வாழ்வை எப்படி வாழ்வதென்று முடிவெடுக்க எனக்கு முழு சுதந்திரம் உண்டு என உணரவில்லை. | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், பதில் எல்லா நேரமும் உண்மையில்லாமல் இருந்தால் அல்லது சிறிது உண்மை என்பதால் - பற்றாக்குறையாக உள்ளது | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், எப்படி வாழ்வதென்று முடிவெடுக்கும் சுதந்திரம் அல்லது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் சொல்வதற்கான சுதந்திரம் அல்லது நேர்மையாக இருப்பதற்கான சுதந்திரம் என்பவற்றில் குறை நிலையில் உள்ளதால் - சுதந்திரத்திலும் குறைநிலை உள்ளது. | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், சுதந்திரம் அல்லது ஆற்றல் அல்லது இணைவு என்பவற்றில் குறைநிலை இருந்தால் - சுயநிர்ணயமும் குறைநிலை உள்ளது. | |
| | | கருத்துக்களையும் பரிந்துரைகளையும் சொல்ல சுதந்திரம் உண்டு என உணரவில்லை. | | | | |
| | | ஒன்றுடன் நேர்மையாக இருக்க முடியும் என உணரவில்லை. | | | | |
| | ஆற்றல் | மற்ற மக்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிட நினைப்பதில்லை | | சொல்வதற்கான சுதந்திரம் அல்லது நேர்மையாக இருப்பதற்கான சுதந்திரம் என்பவற்றில் குறை நிலையில் உள்ளதால் - சுதந்திரத்திலும் குறைநிலை உள்ளது. | | |
| | | செய்ததை சரியாக செய்து முடித்ததாக உணரவில்லை | | | | |
| | | பொதுவாக என்னால் முடியும் என உணரவில்லை | | | | |
| | இணைவு | என்னோடு பழகுபவர்களுடன் நல்ல முறையில் பழகுவதில்லை | | உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், இணைவதனால் கிடைக்கும் இணைவு அல்லது நெருக்கமான இணைவு அல்லது கவனமான இணைவு என்பவற்றில் குறை நிலை இருப்பதனால் - இணைவிலும் குறை நிலை உள்ளது. | | |
| | | தொடர்ச்சியாக பழகுபவர்களுடன் நெருக்கமானவர்களாக கருதவதில்லை | | | | |
| | | நெருக்கமானவர்கள் என் மீது அக்கறை கொண்டுள்ளார்கள் என உணரவில்லை | | | | |

## பின்னிணைப்பு 2: சுட்டிகள்/மாறிகள்/பரிமாணங்கள் என்பவற்றுள் ஒன்றிணைந்து பின்பற்றப்பட்ட படிமுறைகள் – உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு

<table>
<tr><th colspan="2">சுட்டிகள்</th><th>மாறிகள்</th><th>மாறிகளின் குறை நிலைக்கான தெரிவு முறைகள்</th><th colspan="2">சுட்டிகளின் குறை நிலைக்கான தெரிவு முறைகள்</th><th>பரிமாணங்களின் குறை நிலைக்கான தெரிவு முறைகள்</th></tr>
<tr><td>மகிழ்ச்சி</td><td colspan="2"></td><td colspan="3">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், பதில் எல்லா நேரமும் திருப்தி இல்லாமல் இருந்தால் அல்லது மிகுந்த திருப்தி இல்லாமல் இருந்தால் - குறை நிலையாக உள்ளது</td><td rowspan="16">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், வாழ்க்கை திருப்தியில் அல்லது மகிழ்ச்சியில் குறை நிலை இருப்பதனால் - உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்விலும் குறை நிலையாக உள்ளது.</td></tr>
<tr><td rowspan="15">வாழ்க்கையில் திருப்தி</td><td colspan="2">ஒட்டு மொத்த வாழ்க்கையில் திருப்தி</td><td colspan="3">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில்இ பதில் எல்லா நேரமும் மகிழ்ச்சி இல்லாமல் இருந்தால் அல்லது மிகுந்த மகிழ்ச்சி இல்லாமல் இருந்தால் - குறை நிலையாக உள்ளது</td></tr>
<tr><td rowspan="14">விசேட வாழ்க்கைத் திருப்திக களங்கள்</td><td>கல்வி</td><td rowspan="14">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில்இ பதில் எல்லா நேரமும் மகிழ்ச்சி இல்லாமல் இருந்தால் அல்லது மிகுந்த மகிழ்ச்சி இல்லாமல் இருந்தால் - குறை நிலையாக உள்ளது</td><td rowspan="4">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், கல்வியில் அல்லது வீட்டு வசதியில் அல்லது வருமானத்தில் அல்லது வேலையில் குறை நிலையாக இருப்பது – அடிப்படை தேவைகளில் குறை நிலையாக உள்ளது.</td><td rowspan="14">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், ஓட்டு மொத்த வாழ்க்கையில் திருப்தியில் அல்லது (சுகாதாரத்தில்+வலையமைப்பில் அல்லது உணவில்+உணர்வு சார்ந்த நல்வாழ்வு அல்லது அடிப்படைத் தேவைகள் அல்லது உள்ளூர்ப் பாதுகாப்பு) குறை நிலையாக இருப்பது - வாழ்க்கை திருப்தி குறை நிலையாக உள்ளது.</td></tr>
<tr><td>வீடு</td></tr>
<tr><td>வருமானம்</td></tr>
<tr><td>வேலை</td></tr>
<tr><td>சுகாதாரம்</td><td rowspan="4">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், சுகாதாரம் அல்லது நண்பர்கள் அல்லது குடும்பம் அல்லது அயலவர்கள் உறவு குறைவாக இருந்தால் - சமூக வலையமைப்பிலும் சுகாதாரத்திலும் குறை நிலையாக உள்ளது.</td></tr>
<tr><td>நண்பர்கள்</td></tr>
<tr><td>குடும்பம்</td></tr>
<tr><td>அயலவர்கள்</td></tr>
<tr><td>உணவு</td><td rowspan="5">உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், உணவு அல்லது உன்னுடைய வாழ்வு தொடர்பான சுதந்திரமான தெரிவு மற்றும் கட்டுப்பாடு அல்லது கௌரவம் அல்லது மற்றவருக்கு உதவும் திறன் அல்லது ஆன்மீக/சமய/தத்துவரீதியிலான நம்பிக்கைகள் என்பவை குறைவாக இருப்பதால் - உணர்வு சார்ந்த நல்வாழ்வு மற்றும் உணவு என்பவற்றில் குறை நிலையாக உள்ளது.</td></tr>
<tr><td>உன்னுடைய வாழ்வு தொடர்பான சுதந்திரமான தெரிவு மற்றும் கட்டுப்பாடு</td></tr>
<tr><td>கௌரவம்</td></tr>
<tr><td>மற்றவருக்கு உதவும் திறன்</td></tr>
<tr><td>ஆன்மீக/சமய/தத்துவரீதியிலான நம்பிக்கைகள்</td></tr>
<tr><td>உள்ளூர் பாதுகாப்பு</td><td>உண்மைப் பகுப்பாய்வின் பயன்பாட்டில், உள்ளூர் பாதுகாப்பில் குறைவாக இருப்பதால் - உள்ளூர் பாதுகாப்பிலும் குறை நிலையாக உள்ளது.</td></tr>
</table>

## பின்னிணைப்பு 3: சுட்டிகள், மாறிகள் அளவில் குறைநிலை – உளவியல் சார்ந்த நல்வாழ்வு

### அட்டவணை 1: சுட்டிகள் அளவில் குறைநிலை

| சுட்டிகள் | பின்தங்கிய நிலை | ஆண் | பெண் | குறிப்பிடத்தக்க அளவு | ஓற்றைப்படை விகிதம் / வாய்ப்பு விகிதம் |
|---|---|---|---|---|---|
| வாழ்வின் அர்த்தம் | பின்தங்கிய நிலை இல்லாமை | 67.5% | 81.2% | 0.020* | 2.0747 |
| | பின்தங்கிய நிலை | 32.5% | 18.8% | | |
| சுதந்திரம் | பின்தங்கிய நிலை இல்லாமை | 82.8% | 84.5% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | 17.2% | 15.5% | | |
| ஆற்றல் | பின்தங்கிய நிலை இல்லாமை | 88.6% | 89.8% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | 11.4% | 10.2% | | |
| இணைவு | பின்தங்கிய நிலை இல்லாமை | 74.9% | 87.7% | 0.016* | 0.420 |
| | பின்தங்கிய நிலை | 25.1% | 12.3% | | |
| சுயநிர்ணயம் | பின்தங்கிய நிலை இல்லாமை | 72.5% | 65.3% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | **34.7%** | **27.5%** | | |
| உளவியல் சார்ந்த நல்வாழ்வு | பின்தங்கிய நிலை இல்லாமை | 64.9% | 51.1% | 0.039* | 0.506 |
| | பின்தங்கிய நிலை | **48.9%** | **35.1%** | | |

* வாய்ப்பு விகிதம் குறிப்பிட்ட 0.05 அளவில் இருக்கிறது

### அட்டவணை 2: மாறிகள் அளவில் குறைநிலை

| சுட்டிகள் | | மாறிகள் | ஆண் | பெண் | குறிப்பிடத் தக்க அளவு | ஓற்றைப்படை விகிதம் / வாய்ப்பு விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| வாழ்வின் அர்த்தம் | | வாழ்வு தெளிவான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. | 21.7% | 9.3% | .012* | .369 |
| | | திருப்திகரமான வாழ்க்கைக்கான அர்த்தத்தை/காரணத்தை கண்டறியவில்லை | 24.5% | 10.6% | .007* | .368 |
| | | எனது வாழ்க்கைக்கு அர்த்தம் தரக்கூடிய தெளிவான அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை | 20.4% | 8.6% | .014* | .368 |
| | | கலப்புரு | 32.5% | 18.8% | .022** | 2.075 |
| சுயநிர்ணயம் | சுதந்திரம் | எனது வாழ்வை எப்படி வாழ்வதென்று முடிவெடுக்க எனக்கு முழு சுதந்திரம் உண்டு என உணரவில்லை. | 9.5% | 10.6% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | | கருத்துக்களையும் பரிந்துரைகளையும் சொல்ல சுதந்திரம் உண்டு என உணரவில்லை. | 6.0% | 11.1% | | |
| | | ஒன்றுடன் நேர்மையாக இருக்க முடியும் என உணரவில்லை. | 6.6% | 13.4% | | |
| | | கலப்புரு | 17.2% | 15.5% | | |
| | ஆற்றல் | ஏனைய மக்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிட நினைப்பதில்லை | 7.6% | 4.4% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | | செய்ததை சரியாக செய்து முடித்ததாக உணரவில்லை | 7.8% | 3.0% | | |
| | | பொதுவாக என்னால் முடியும் என உணரவில்லை | 4.7% | 6.6% | | |
| | | கலப்புரு | 11.4% | 10.2% | | |
| | இணைவு | என்னோடு பழகுபவர்களுடன் நல்ல முறையில் பழகுவதில்லை | 9.0% | 4.2% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | | தொடர்ச்சியாக பழகுபவர்களுடன் நெருக்கமானவர்களாக கருதவதில்லை | 12.3% | 7.0% | | |
| | | நெருக்கமானவர்கள் என் மீது அக்கறை கொண்டுள்ளார்கள் என உணரவில்லை | 15.3% | 7.5% | | |
| | | கலப்புரு | 25.1% | 12.3% | .016* | 2.383 |
| | கலப்புரு | | 34.7% | 27.5% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| உளவியல் சார்ந்த நல்வாழ்வு | | கலப்புரு | 48.9% | 35.1% | .039* | 1.767 |

* வாய்ப்பு விகிதம் குறிப்பிட்ட 0.05 அளவில் இருக்கிறது.

அட்டவணை 3: பகுப்பாய்வு வெளியீட்டின் பின்னோக்கு

| முடிவு மாறிகள | குறிப்பிடத்தக்க தனிப்பட்ட கணிப்புக்கள் | | | | | | | வாய்ப்பு விகித சோதனை | ஆர்2 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கணிக்கப்பட்டவைகள் | வீ | எஸ்.ஈ. வீ | வோல்ட் சீ - சதுரம் | டீப்வ் | குறிப்பி. | சோதனை(வீ) ஒற்றைப்படை விகிதம்/வாய்ப்பு விகிதம் | வாய்ப்புப் பதிவு | காக்ஸ் & ஸ்னெல் | நகல்கேர்க் |
| **வாழ்வின் அர்த்தம்** | | | | | | | | | | |
| பின்தங்கிய மகிழ்ச்சி (ஆம= 1, இல்லை= 0) | பின்தங்கிய – வாழ்வின் அர்த்தம் (ஆம = 1, இல்லை = 0) | 1.153 | .453 | 6.481 | 1 | .011* | 3.167 | 140.534ஏ | .028 | .057 |
| | மாறிலி | -2.570 | .301 | 72.736 | 1 | .000 | .077 | | | |
| பின்தங்கிய வாழ்வின் திருப்தி (ஆம= 1, இல்லை= 0) | பின்தங்கிய – வாழ்வின் அர்த்தம் (ஆம = 1, இல்லை = 0) | 1.641 | .493 | 11.068 | 1 | .001* | 5.159 | 120.003ஏ | .049 | .110 |
| | மாறிலி | -2.999 | .365 | 67.638 | 1 | .000 | .050 | | | |
| பாலினம் (ஆண = 1, பெண = 0) | பின்தங்கிய – வாழ்வின் அர்த்தம் (ஆம = 1, இல்லை = 0) | .730 | .315 | 5.377 | 1 | .020* | 2.075 | 301.295ஏ | .024 | .033 |
| | மாறிலி | -.357 | .157 | 5.144 | 1 | .023 | .700 | | | |
| **Self Determination** | | | | | | | | | | |
| பின்தங்கிய மகிழ்ச்சி (ஆம= 1, இல்லை= 0) | பின்தங்கிய - சுயநிர்ணயம் (ஆம = 1, இல்லை = 0) | .873 | .448 | 3.800 | 1 | .051 | 2.394 | 143.138ஏ | .017 | .034 |
| | மாறிலி | -2.512 | .306 | 67.590 | 1 | .000 | .081 | | | |
| பின்தங்கிய வாழ்வின் திருப்தி (ஆம= 1, இல்லை= 0) | பின்தங்கிய - சுயநிர்ணயம் (ஆம = 1, இல்லை = 0) | 1.456 | .485 | 9.019 | 1 | .003* | 4.288 | 126.167ஏ | .041 | .090 |
| | மாறிலி | -2.951 | .371 | 63.292 | 1 | .000 | .052 | | | |
| பாலினம் (ஆண = 1, பெண = 0) | பின்தங்கிய - சுயநிர்ணயம் (ஆம = 1, இல்லை = 0) | .335 | .291 | 1.321 | 1 | .250 | 1.397 | 306.054ஏ | .006 | .008 |
| | மாறிலி | -.281 | .163 | 2.980 | 1 | .084 | .755 | | | |
| **Psychological wellbeing** | | | | | | | | | | |
| பின்தங்கிய மகிழ்ச்சி (ஆம= 1, இல்லை= 0) | பின்தங்கிய – உளவியல் சார்ந்த நல்வாழ்வு (ஆம = 1, இல்லை = 0) | 1.245 | .474 | 6.895 | 1 | .009* | 3.473 | 139.058ஏ | .033 | .069 |
| | மாறிலி | -2.836 | .384 | 54.591 | 1 | .000 | .059 | | | |
| பின்தங்கிய வாழ்வின் திருப்தி (ஆம= 1, இல்லை= 0) | பின்தங்கிய – உளவியல் சார்ந்த நல்வாழ்வு (ஆம = 1, இல்லை = 0) | 1.705 | .562 | 9.211 | 1 | .002* | 5.504 | 119.797ஏ | .049 | .110 |
| | மாறிலி | -3.347 | .485 | 47.541 | 1 | .000 | .035 | | | |
| பாலினம் (ஆண = 1, பெண = 0) | பின்தங்கிய – உளவியல் சார்ந்த நல்வாழ்வு (ஆம = 1, இல்லை = 0) | .569 | .276 | 4.270 | 1 | .039 | 1.767 | 301.628ஏ | .019 | .026 |
| | மாறிலி | -.387 | .179 | 4.673 | 1 | .031 | .679 | | | |

* குறிப்பிட்ட 0.05 அளவில் இருக்கிறது.

## பின்னிணைப்பு 4: சுட்டிகள், மாறிகள் அளவில் குறைநிலை – உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு

### அட்டவணை 1: சுட்டிகள், அளவில் குறைநிலை

| சுட்டிகள | பின்தங்கிய நிலை | ஆண் | பெண் | குறிப்பிடத் தக்க அளவு | ஒற்றைப்படை விகிதம் / வாய்ப்பு விகிதம் |
|---|---|---|---|---|---|
| மகிழ்ச்சி | பின்தங்கிய நிலை இல்லாமை | 93.00% | 87.60% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | 7.00% | 12.40% | | |
| ஒட்டு மொத்த வாழ்க்கைத் திருப்தி | பின்தங்கிய நிலை இல்லாமை | 90.10% | 92.00% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | 9.90% | 8.00% | | |
| வாழ்க்கைத் திருப்தி – களங்களில் | பின்தங்கிய நிலை இல்லாமை | 44.10% | 51.30% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | 48.07% | 55.90% | | |
| வாழ்க்கைத் திருப்தி – கலப்புரு (ஒட்டு மொத்த+களங்களில்) | பின்தங்கிய நிலை இல்லாமை | 43.20% | 50.30% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | **56.80%** | **49.70%** | | |
| உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு - கலப்புரு | பின்தங்கிய நிலை இல்லாமை | 87.6% | 91.9% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | பின்தங்கிய நிலை | 12.4% | 8.1% | | |

* வாய்ப்பு விகிதம் குறிப்பிட்ட 0.05 அளவில் இருக்கிறது.

### அட்டவணை 2 : மாறிகள் அளவில் குறைநிலை

| சுட்டிகள | | மாறிகள | ஆண் | பெண் | குறிப்பிடத் தக்க அளவு | ஒற்றைப்படை விகிதம்/ வாய்ப்பு விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| மகிழ்ச்சி | | | 7.0% | 12.4% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| வாழ்க்கை | ஒட்டு மொத்த வாழ்க்கைத் திருப்தி | | 9.9% | 8.0% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | களங்களில் பிரதான வாழ்க்கைத் திருப்தி | கல்வி | 26.4% | 31.9% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | | வீடு | 20.2% | 22.4% | | |
| | | வருமானம் | 29.4% | 35.5% | | |
| | | வேலை | 9.9% | 11.7% | | |
| | | சுகாதாரம் | 10.6% | 23.1% | .016* | .395 |
| | | நண்பர்கள் | 14.1% | 5.0% | .023* | 3.146 |
| | | குடும்பம் | 6.3% | 5.6% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| | | அயலவர்கள் | 11.9% | 8.5% | | |
| | | உணவு | 7.2% | 6.4% | | |
| | | உன்னுடைய வாழ்வு தொடர்பான சுதந்திரமான தெரிவு மற்றும் கட்டுப்பாடு | 4.4% | 10.5% | | |
| | | கௌரவம் | 6.0% | 7.5% | | |
| | | மற்றவருக்கு உதவும் திறன் | 7.2% | 5.5% | | |
| | | ஆன்மீக/சமய/தத்துவரீதியிலான நம்பிக்கைகள் | .0% | 1.9% | | |
| | | உள்ளூர் பாதுகாப்பு | 7.4% | 9.2% | | |
| | | கலப்புரு | 48.7% | 55.9% | | |
| | | கலப்புரு | 49.7% | 56.8% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |
| உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு | | கலப்புரு | 8.1% | 12.4% | அளவீட்டுரீதியாக குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை | |

* வாய்ப்பு விகிதம் குறிப்பிட்ட 0.05 அளவில் இருக்கிறது.

## அட்டவணை 3: பகுப்பாய்வு வெளியீட்டின் பின்னோக்கு

| முடிவு மாறிகள் | குறிப்பிடத்தக்க தனிப்பட்ட கணிப்புக்கள் | | | | | | | வாய்ப்பு விகித சோதனை | ஆர்2 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கணிக்கப்பட்டவைகள | வீ | எஸ்.ஈ. வீ | வோல்ட் சீ - சதுரம் | டீப்வ் | குறிப்பி. | சோதனை(வீ) ஒற்றைப்படை விகிதம்/வாய்ப்பு விகிதம் | வாய்ப்புப் பதிவு | காக்ஸ் & ஸ்னெல் | நகல்கேர்க் |
| **வாழ்க்கைத் திருப்தி** | | | | | | | | | | |
| **பின்தங்கிய மகிழ்ச்சி (ஆம் = 1, இல்லை = 0)** | பின்தங்கிய - வாழ்வின் அர்த்தம் (ஆம் = 1, இல்லை = 0) | 1.554 | .573 | 7.367 | 1 | .007* | 4.731 | 137.257a | .042 | .086 |
| | கலப்புரு | -3.229 | .514 | 39.388 | 1 | .000 | .040 | | | |
| **பாலினம் (ஆம் = 1, இல்லை = 0)** | பின்தங்கிய - வாழ்வின் அர்த்தம் (ஆம் = 1, இல்லை = | -.288 | .271 | 1.134 | 1 | .287 | .749 | 304.716a | .005 | .007 |
| | கலப்புரு | -.047 | .197 | .058 | 1 | .810 | .954 | | | |
| **உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு** | | | | | | | | | | |
| **பாலினம் (ஆம் = 1, இல்லை = 0)** | பின்தங்கிய - உள்ளுணர்வு சார்ந்த நல்வாழ்வு (ஆம் = 1, இல்லை = 0) | -.473 | .451 | 1.097 | 1 | .295 | .623 | 314.203a | .005 | .007 |
| | கலப்புரு | -.145 | .140 | 1.073 | 1 | .300 | .865 | | | |

* குறிப்பாக 0.05 அளவில் இருக்கின்றது

## பின்னிணைப்பு 5: கம்மின்னினுடைய 7 வாழ்க்கைத் திருப்தியின் களங்கள்

| களங்கள் | ஆர்வமான விடயங்கள் |
|---|---|
| பொருள் சார்ந்த நல்வாழ்வு | உணவுஃவீடுஃவருமானம் |
| சுகாதாரம் | சுகாதாரம் |
| உற்பத்தி | வேலை |
| பாதுகாப்பு | பௌதீகபாதுகாப்பு |
| நெருங்கிய நட்பு | நண்பர்கள் மற்றும் குடும்பம |
| சமுதாயம் | அயலவர்கள் மற்றும் கல்வி - மற்றவருக்கு உதவும் திறன் |
| உணர்வுரீதியிலான நல்வாழ்வு | ஆன்மீக/சமய/தத்துவரீதியிலான நம்பிக்கைகள் ஊடான நல்வாழ்வு |



பொருள் சார்ந்த நல்வாழ்வின் இறுதி முடிவாக அடையப்படவது பொருள் சாராத நல்வாழ்வு (உள நல்வாழ்வு) என்பதனால் உள நல்வாழ்வு என்பதானது பொருள் சாரந்ததாக மாத்திரம் கருதப்படலாகாது எனும் எண்ணக்கருவிலான விழிப்புணர்வு அதிகரித்து வருகின்றது. அபிவிருத்தியின் முடிவான இலக்குகளாக சந்தோஷமும், நல்வாழ்வும் அடிக்கடி கருதப்படுகின்றன. வருமானம் மற்றும் மகிழ்ச்சி என்பன மிகக் குறைந்த அளவான வருமானத்துடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதை பல ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. இதன் விளைவாக ஆய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் நல்வாழ்வின் பொருள் சாராத தன்மையில் ஆர்வத்தை அதிகரித்துள்ளது. நல்வாழ்வினை அளவிட வருமானமும் நுகர்வும் போதுமானது அல்ல என வளரும் விழிப்புணர்வானது நல்வாழ்வினை நேரடியாக அளவிடுவதற்கான உன்மையான ஆர்வத்தை ஊக்கப்படுத்துகின்றது. வறுமையின் பல்பரிமானத் தன்மையின் ஒரு மிக முக்கியமான பரிமாணமாக உள நல்வாழ்வு அதிகமாக கருதப்படுகின்றது. வறுமையின் பல்பரிமாணப் பகுப்பாய்வானது காலங்களுடாக பொருளாதார காட்டிகளிலிருந்து சமூக மற்றும் உள நல்வாழ்வு பொன்ற வறுமையின் மனோவியல் காட்டிகள் வரை பல எண்ணிக்கையான குறிகாட்டிகளை அடையாளப்படுத்துகின்றது. இருந்தாலும் எவ்வாறாயினும் வறுமையின் சிக்கல் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு தனிப்பட்ட குடும்ப அளவில் சர்வதேச ரீதியில் ஒப்பிடக் கூடிய தரவுகள் குறைவாகவே இருக்கின்றன.

ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டிற்கான முன்முயற்சியாளரால் (OPITI) உள்ளுணர்வு சார்ந்த குறிகாட்டிகள் அவ்வாறான உளவியல் அல்லது மனநல சுட்டிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு தொகுதி வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் இலங்கை பதுளை மாவட்டத்தில் முன்னோடியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இத்தொகுதி இலங்கையர்களின் சூழ்நிலையில் நல்வாழ்வின் பல்பரிமாணங்களை விளங்கிக்கொள்ளவும், அளவிடுவதற்குமான ஒரு வளமான தரவுத் தொகுதியினை விளைவித்தது. இவ் அறிக்கை நல்வாழ்வு மற்றும் பால்நிலை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை ஆராய்வதற்கு திரட்டப்பட்ட தரவுகளிலினை கவனத்திற்கொள்வதுடன் உள நல்வாழ்வினை அனுபவித்தல் தொடர்பாக ஆண் மற்றும் பெண்களிடையிலான சுவாரசியமான வேறுபாடுகளையும் வெளிக்கொண்டு வருகின்றது.

cepa
centre for poverty analysis
29 R G Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka.
Tel: +94(011) 4690200, 2676955
Fax: +94 (011) 2676 959
E-mail: info@cepa.lk
www.cepa.lk

The Asia Foundation

ISBN 978-955-1040-73-4